பக்கங்கள்: 11

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2055 கார்த்திகை 27 வியாழக்கிழமை 12.12.2024 கதிர் 035

## இனி இது ரகசியம் அல்ல!

சபாநாயகர் அசோக சபுமல் ரன்வல கலாநிதிப் பட்டம் பெற்றாரா இல்லையாஎன்பதுதெற்குஅரசியலில் பெரும் புயலைக் கிளப்பியுள்ளது. அதற்குக் காரணம் உண்டு. ☞ 2

# கட்சிகளோடு சேர்ந்து செயற்படுவது தொடர்பில் தமிழ் அரசின் மத்திய குழுவே முடிவு செய்யும்

### செயலாளர் சத்தியலிங்கம் திட்டவட்டம்

ஆளும்தரப்பு புதிய அரசமைப்பு முயற்சிகளைத் தொடங்கும்போது தமிழ்க் கட்சிகளுடன் இணைந்து செயற்படுவது குறித்து தமிழ் அரசுக் கட்சியின் மத்திய குழுவே முடிவு செய்யும் என்று கட்சியின் செயலாளரும்நாடாளுமன்றஉறுப்பினருமான மருத்துவர் சத்தியலிங்கம் தெரிவித்தார்.

வவுனியாவில் செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஆளும்தரப்பின் புதிய அரசமைப்பு முயற்சியை தமிழர் தரப்பு ஒன்றிணைந்து எதிர்கொள்ளவேண்டும் என்றும் தமிழ் மக்கள் பேரவையில் வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் விக்னேஸ்வரனால் முன்வைக்கப்பட்ட அரசமைப்பு வரைவின் அடிப்படையில் அந்த ஒன்றிணைவு அமைய வேண்டும்என்றும்தமிழ்க்காங்கிரஸ்தலைவர் கஜேந்திரகுமார் முயற்சி செய்து வருகின்றார். இது தொடர்பில் தமிழ் அரசுக் கட்சியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரனை சிநேகபூர்வமாகவும் ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதனை உத்தியோகபூர்வமாகவும் சந்தித்துப் பேசிய அவர், விக்னேஸ்வரனின் அரசமைப்பு வரைபையும் அவர்களிடம் கையளித்தார்.

இதேவேளைஅடுத்துவரவுள்ளஉள்ளூராட்சி சபைத் தேர்தலில் தமிழ் அரசுக் ☞ 2

## மகிந்தவின் பாதுகாப்பை குறைக்கவேகூடாதாம்

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் பாதுகாப்பை தற்போதைய ஆளும்தரப்பு குறைத்துவிட்டதாக சட்டத்தரணி மனோஜ் கமகே தெரிவித்துள்ளார். அது தொடர்பாக உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் அவ்வாறு பாதுகாப்பைக் குறைக்கக்கூடாது என்றும் அவர் தெரிவித்தார்.

பொதுஜன பெரமுன கொள்கை மையத்தில் நேற்று ☞ 8

## 2023இல் எலிக் காய்ச்சலால் நாட்டில் 200 பேர் உயிரிழப்பு

எலிக் காய்ச்சல் காரணமாக கடந்த வருடம் 200 பேர் உயிரிழந்துள்ளனர். 9 ஆயிரம் பேர் பாதிக்கப்பட்டனர். இந்த வருடத்தில் இதுவரையில் 10 ஆயிரம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று தொற்றுநோய் பிரிவின் விசேட வைத்திய நிபுணர் குமுது வீரகோன்ன் தெரிவித்தார்.

எலிக்காய்ச்சல் பரவல் குறித்து நேற்று சுகாதாரமேம்பாட்டுப்பணியகத்தின்ஏற்பாடு செய்யப்பட்ட விசேட ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்,

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

இலங்கையில்கடந்தவருடம்மாத்திரம் எலிக்காய்ச்சலால்பாதிப்புற்ற9ஆயிரம்பேர் அடையாளங்காணப்பட்டுள்ளனர். 200 பேர்உயிரிழந்தும்உள்ளனர். இரத்தினபுரி, குருநாகல், காலி, மாத்தறை, கொழும்பு ஆகிய மாவட்டங்களிலேயே அதிக ☞ 8



## குரங்குகளை சீனாவிற்கு வழங்க ஆளும்தரப்பு முன்வரவேண்டும்

### முன்னாள் அமைச்சர் மகிந்த அமரவீர யோசனை

இலங்கையில் அதிகரித்துள்ள சிறுவன் குரங்குகளை சீனாவிற்குக் கொடுக்க ஆளும்தரப்பு முன்வர வேண்டும் என்று முன்னாள் விவசாயத்துறை அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார். ☞ 8

## கல்வி ஒரு வர்த்தகப் பண்டமல்ல அந்த நிலையை மாற்றவேண்டும்

### பிரதமர் ஹரினி தெரிவிப்பு

கல்வி ஒரு வர்த்தகப் பண்டம் அல்ல. நாம் கல்வியை ஒரு வர்த்தக பண்டமாக மாற்றியுள்ளோம். இந்த கலாசாரத்தை மாற்றவேண்டும் என்று பிரதமர் கலாநிதி ஹரினி தெரிவித்தார்.

'தற்போதைய கல்வி முறையில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான மூலோபாயங்களை வகுத்தல்' என்ற தலைப்பில் கொழும்பு இலங்கை மன்றத்தில் நேற்று நடைபெற்ற செயலமர்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சர், பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய இதனைத் தெரிவித்தார்.

புதிய ஆளும்தரப்பின் கொள்கைப் பிரகடனத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் சிறுபராய அபிவிருத்தி தொடக்கம் உயர்கல்வி, ☞ 8

## வானிலை அறிவிப்பு

தென்மேற்கு வங்காள விரிகுடாவில் உருவாகியுள்ள குறைந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதி எதிர்வரும் 24 மணித்தியாலத்தில் மேற்கு வடமேற்கு திசையில், இலங்கையின் வடக்கு கரையை அண்மித்து தமிழ்நாட்டை நோக்கி நகரக்கூடும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது.

இதன்காரணமாக நேற்றையதினம் புத்தளத்திலிருந்து காங்கேசன்துறை மற்றும் மன்னார் ஊடாக முல்லைத்தீவு வரையான கரையோரத்திற்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகளுக்குச் செல்வதனை மீனவர்கள் தவிர்க்க வேண்டும் எனக் கோரப்பட்டுள்ளது. ☞ 8

## தோட்டத் தொழிலாளர்களுக்கு காணியுடன் தனி வீடு அவசியம்

### தொடர் மாடிகள் வேண்டாம் என்கிறார் ஜீவன்

தோட்டத் தொழிலாளர்களுக்கு 10 பேர்ச்சஸ் காணியுடன் தனிவீடு அவசியம். தொடர் மாடி வீட்டுத் திட்டத்தை நாம் எதிர்க்கின்றோம் என்று இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் ☞ 8

## தேசியப் பட்டியல் மூலம் எம்.பியானார் முஸ்தபா

புதிய ஜனநாயக முன்னணியின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவிக்காக ஜனாதிபதி சட்டத்தரணி பைசர் முஸ்தபாவின் பெயரை குறிப்பிட்டு தேர்தல்கள் ஆணைக்குழு வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டுள்ளது.

கடந்த பொதுத் தேர்தலில் புதிய ஜனநாயக முன்னணிக்கு இரண்டு தேசியப்பட்டியல் ஆசனங்கக் கிடைக்கப்பெற்றன. அவற்றில்ஒன்றுரவி கருணாநாயக்கவுக்கு வழங்கப்பட்டது. மற்றொருஆசனத்துக்குபைசர்முஸ்தபா நியமிக்கப்பட்டுள்ளார்.

புதிய ஜனநாயக முன்னணியின் தேசிய பட்டியல் உறுப்பினராக ☞ 8

## பொருள் தட்டுப்பாட்டுக்கான காரணத்தை ஏற்கமுடியாது

### சம்பிக்க ரணவக்க குமுறல்

சந்தையில் அரிசி மற்றும் தேங்காய் ஆகிய அத்தியாவசிய உணவு பொருட்களுக்கு ஏற்படும் தட்டுப்பாட்டுக்கான காரணம் குறித்து ஆளும்தரப்பு முன்வைக்கும் விடயங்களை ஏற்றுக்கொள்ள முடியாது என்று ஐக்கிய குடியரசு முன்னணியின் தலைவரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

கொழும்பில்உள்ளஐக்கியகுடியரசுமுன்னணியின் பணியிடத்தில் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்தபோது அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

சந்தையில் அரிசி மற்றும் தேங்காய் ஆகிய அத்தியாவசிய உணவு பொருட்களுக்கான தட்டுப்பாடு தீவிரமடைந்துள்ளது. தட்டுப்பாட்டுக்கான காரணம் குறித்து ஆளும்தரப்பு முன்வைக்கும்விடயங்களைஏற்றுக்கொள்ள முடியாது.

உற்பத்திசெய்யப்படும் அரிசி மற்றும் விநியோகம் ☞ 2

## பைசர் முஸ்தபாவின் எம்.பி. நியமனம் குறித்து அறிக்கை

புதிய ஜனநாயக முன்னணியின் கூட்டணிக்கட்சிகளின் தேசியப்பட்டியல்நாடாளுமன்ற உறுப்பினராக ஜனாதிபதி சட்டத்தரணி பைசர் முஸ்தபா நியமிக்கப்பட்டமை தொடர்பில் கட்சியின்செயலாளர்ஷியாமலா பெரேரா விளக்கமளித்து கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு அனுப்பப்பட்டுள்ள கடிதத்தில் பெரும்பான்மையினரின் தீர்மானத்திற்குஅமையவேஇந்த நியமனம்வழங்கப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

புரிந்துணர்வு உடன்படிக்கையில்உள்ளதரப்பினிடையே பொதுவான உடன்பாட்டை எட்டுவதற்கான போக்கு இல்லாததால் பெரும்பான்மை ஒப்பந்தத்தை ஏற்க வேண்டும் என ஏகமனதாக முடிவு செய்யப்பட்டது.

இதன்படி, ஜனாதிபதியின் சட்டத்தரணி பைசர் முஸ்தபாவின் பெயரை ☞ 8

## ஜெனரல் ஜானக்க பெரேராவின் கொலை பற்றி மீள் விசாரணை

### தேவை என்கின்றனர் அவரது குடும்பத்தினர்

மேஜர் ஜெனரல் ஜானக்க பெரேராவின் கொலை தொடர்பில் முறையான விசாரணைகளை நடத்துமாறு கோரி அவரது உறவினர்கள் மற்றும் பொதுமக்கள் ☞ 2

காலைக்கதிர் Kalaikkathir

# கடற்படைச் சிப்பாய் கொலை: 10 இந்திய மீனவர் விடுதலை

## படகோட்டிக்கு 35 லட்சம் ரூபாய் அபராதம்

இந்தியா மீனவர்கள் 9 பேர் விடுதலை: படகு ஓட்டுனருக்கு ரூ.35 லட்சம் அபராதம் மல்லாகம் நீதிமன்ற உத்தரவு!

எல்லை தாண்டி மீன்பிடித்தபோது கடற்படைச் சிப்பாயை படகால் மோதிக் கொலைசெய்தார்கள்என்றுகுற்றஞ்சாட்டப்பட்ட 10 இந்திய மீனவர்களும் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். உயிரிழந்தசிப்பாய்க்கும் சேதமடைந்த கடற்படைப் படகுக்குமாக 35 லட்சம்ரூபாய் இழப்பீடுவழங்கப்படவேண்டும் என்று படகோட்டிக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

தமிழ்நாடு நாகபட்டினம் மீன்பிடி துறைமுகத்திலிருந்து மீன்பிடிக்கப் புறப்பட்டு எல்லைதாண்டி வந்திருந்த நிலையில் 2024 ஜூன் 25 இலங்கைக் கடற்படையின் ரோந்துப் படகு மீது மீன்பிடி விசைப்படகு மோதியது. இதில் கடற்படைச் சிப்பாய் ஒருவர் உயிரிழந்தார். இந்தியப் படகில் இருந்த 10 மீனவர்கள் மீது கொலை வழக்குப் பதிவு செய்யப்பட்டு மல்லாகம் நீதிமன்றத்தில் விசாரணை நடைபெற்று வந்தது.

நேற்று இந்த வழக்கின் தீர்ப்பு வழங்கப்பட்டது. நீதிபதி சுபரஞ்சனி 10 மீனவர்களையும் கொலைக் குற்றச்சாட்டில் இருந்து நிபந்தனையுடன் விடுதலை செய்து தீர்ப்பளித்தார். நடுக்கடலில் படகுகள் மோதி ஏற்பட்ட இந்த விபத்தில் கடற்படை வீரர் உயிரிழந்ததால் அவரது குடும்பத்திற்கு 10 லட்சம் ரூபாய் இழப்பீடும், கடற்படை ரோந்து படகு சேதம் அடைந்தால் ரூ.25 லட்சம் இழப்பீடு என மொத்தமாக ரூ.35 லட்சம் இழப்பீட்டுத் தொகையை படகோட்டி கட்டவேண்டும் எனவும் அபராத தொகையை கட்ட தவறும்பட்சத்தில் படகு ஓட்டுனருக்கு ஓராண்டு சிறை தண்டனை விதிக்கப்படும் எனவும் நீதிபதி தீர்ப்பளித்தார்.

இதையடுத்து விடுதலை செய்யப் பட்டவர்களில் 9 மீனவர்களை மெரிகான சிறப்பு முகாமுக்கு அழைத்துச் செல்ல நடவடிக்கைமேற்கொள்ளப்பட்டுளது. படகோட்டி மீண்டும் யாழ்ப்பாணம் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

# அதிக விலைக்கு அரிசி விற்றவர்கள் மாட்டினர்

(கிஷாந்தன்)

அரிசின் கட்டுப்பாட்டு விலையை விட அதிக விலைக்கு விற்பனை செய்த பல வியாபாரிகள் மீது நுவரெலியா மாவட்டத்தில் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மாவட்ட நுகர்வோர் கட்டுப்பாட்டு அதிகாரிகள் தெரிவித்தனர்.

கட்டுப்பாட்டு விலையை விட அதிக விலைக்கு நாட்டு அரிசியை விற்பனை செய்த பல வர்த்தகர்களுக்கு எதிராக நுவரெலியா நீதிவான் மன்றில் வழக்கு தாக்கல் செய்யப்படவுள்ளது என்று மாவட்ட நுகர்வோர் கட்டுப்பாட்டு அதிகாரி அமில ரத்நாயக்க தெரிவித்தார்.

நுவரெலியா, நானுஓயா, ரதெல்ல மற்றும் அக்கரப்பத்தனை, ஹோல்புறுக் ஆகிய பகுதிகளில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்தப் பகுதிகளில் உள்ள வர்த்தக நிலையங்களில் நேற்று சோதனை நடவடிக்கையில் ஈடுபட்ட அதிகாரிகள் அதிக விலைக்கு அரிசி விற்றவர்களைப் பிடித்தனர்.

நுவரெலியா மாவட்டம் முழுவதும் இவ்வாறான சோதனைகள் தொடரும் என தலைவர் அமில ரத்நாயக்க மேலும் தெரிவித்தார்.

# கொலையுண்ட கைதிகளுக்கு நீதி கேட்டுப் நேற்று போராட்டம்

2020ஆம் ஆண்டு மகர சிறைச்சாலையில் கொலைசெய்யப்பட்ட கைதிகளுக்கு நீதியைப் பெற்றுக்கொடுக்குமாறு கோரி கொழும்பு கோட்டை ரயில் நிலையத்தில் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

அவர்கள் தொடருந்து நிலையத்திலிருந்து ஜனாதிபதியின் அலுவலகம் நோக்கி நகர்ந்தபோது பொலிஸார் அவர்களைத் தடுத்து நிறுத்தினார்கள். இதனால் பொலிஸாருக்கும் போராட்டக்காரர்களுக்கும் இடையில் முறுகல் நிலை ஏற்பட்டது. எனினும் போராட்டக்காரர்கள் அமைதியான முறையில் ஜனாதிபதி அலுவலகம் நோக்கிச் செல்வதற்கு அனுமதி அளிக்குமாறு வலியுறுத்தினாஜுகள்.

அதனடிப்படையில் அவர் ஜனாதிபதி அலுவலகத்திற்குச் செல்ல அனுமதிக்கப்பட்டனர். அங்கு போராட்டக்காரர்களில் இருவர் ஜனாதிபதியைச் சந்தித்து உரையாடுவதற்கும் சந்தர்ப்பம் வழங்கப்பட்டது.

## இனி இது .....

இலங்கையில் இதற்கு முன்னர் எப்போதும் இல்லாதவாறு இந்த ஆளும்தரப்பில்தான் மிக மிக அதிகமானவர்கள் பட்டதாரிகள் என்று தேசிய மக்கள் சக்தியினர் பீற்றிக்கொண்டனர். கிட்டத்தட்ட தமது உறுப்பினர்கள் அனைவருமே பட்டதாரிகள் என்று பெருமை அடித்துக்கொண்டனர். அதாவது இதற்கு முன்னர் நாடாளுமன்றத்தில் முட்டாள்களும்குற்றவாளிகளுமேஇருந்தார்கள் என்பதைப்போலவும்இப்போதேபடித்தவர்கள் நாடாளுமன்றம்வந்திருக்கிறார்கள்என்பதைப் போலவும் பறைசாற்றிக்கொண்டனர்.

இதனால் சபாநாயகரின் கலாநிதிப் பட்டத்தை எதிர்க் கட்சிகள் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு இப்போது வைத்துச் செய்கின்றன. தேசிய மக்கள் சக்தியினர் பொய்காரர்கள் என்று நிரூபிப்பதற்கு அவர்களுக்கு கிடைத்த அரிதிலும் அரிதான வாய்ப்பாகஅவர்கள்இதனைப்பார்க்கின்றனர். சபாநாயகர் தேர்தல் காலத்தில் தன்னை ஒரு கலாநிதியாகவே பிரபலப்படுத்தினார். நாடாளுமன்றத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்திலும் அவரது கல்வித் தகமைகலாநிதிஎன்றேகுறிப்பிடப்பட்டிருந்தது. ஆனால் சர்ச்சைகளைத் தொடர்ந்து அந்தப் பதம் திடீரென நீக்கப்பட்டது. இது எதிர்க் கட்சிகளுக்கு இன்னும் வாய்ப்பாகிவிட்டது. அதனால் சபாநாயகர் ஒரு கலாநிதி இல்லை, ஜேவிபியினர் பொய்காரர்கள் என்று பகிரங்கமாக நிரூபிப்பதில் எதிர்க் கட்சியினர் ஆர்வம் கொண்டு செயற்படுகிறார்கள்.

ஜப்பானில் உள்ள வசேடா பல்கலைக்கழகத்தில் தான் கலாநிதிப் பட்டம் பெற்றார்என்றேசபாநாயகர்தெரிவித்திருந்தார். ஆனால் அவர் அந்தப் பல்கலைக்கழகத்தில் கற்கவேயில்லை என ஐக்கிய தேசியக் கட்சி கூறுகின்றது.

சபாநாயகர் ஜப்பானில் உள்ள வசேடா பல்கலைக்கழகத்தில் முதுகலைப் பட்டம் பெற்றவரா என்பது தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடகப் பிரிவு அந்தப் பல்கலைக்கழகத்திடம் தகவல்களைக் கோரியிருந்தது.

அதற்கு பதிலளித்த குறித்த பல்கலைக்கழகம்அவ்வாறானஒருவர்அந்தப் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கவில்லை என்று எழுத்து மூலம் அறிவித்துள்ளது.

இந்த அறிவிப்பு உள்ளிட்ட ஏனைய ஆவணங்களையும் ஐக்கிய தேசியக் கட்சி வெளியிடுவதற்கு தயாராகி வருகின்றது.

அதற்கிடையில்நேற்றுசெய்தியாளர்சந்திப்பு ஒன்றை நடத்திய முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஆசு மாரசிங்க, செய்தியாளர்கள் முன்பாகவே ஜப்பானியப் பல்கலைக்கழகத்தின் இணையத்தளத்தில் சபாநாயகரின் பெயரை இட்டு தேடுதல் நடத்திக் காட்டினார்.

ஜப்பானின் வசேடா பல்கலைக்கழகத்தில் சபாநாயகர் அசோக ரன்வல கலாநிதி பட்டம் பெற்றார் என்று கூறப்படுவதால் மேற்படி பல்கலைக்கழகத்தின்இணையத்தளத்திற்குள் சென்று சபாநாயகர் பற்றிய விவரங்கள் இருக்கின்றதா என்று தேடினார்.

அங்கு சபாநாயகரின் பெயரைக் பதவு செய்து, குறித்த பல்கலைக்கழகத்தின் இணையத்தளத்தில் தேடியபோதும் அது தொடர்பில் தரவுகள் எவையும் கிடைக்கவில்லை. எனவே, தனது கலாநிதி பட்டத்தின் நம்பகத்தன்மை தொடர்பான தகவல்களை சபாநாயகர் அசோக ரன்வல முன்வைக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

ஆக மொத்தத்தில், ஒட்டுமொத்த அநுர ஆட்சியையும் அடுத்த 5 வருட காலத்திற்குப் போட்டுத் தாக்குவதற்கு இந்த ஒரு விடயம் போதும் என்று எதிர்க் கட்சிகள் கருதிக்கொண்டன போலும்...

**இடிமின்னல்**

(idiminnal@gmail.com)

## கட்சிகளோடு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்சியோடு தேர்தல் கூட்டு வைத்துக்கொள்ள ரெலோ அமைப்பின் தலைமைக் குழு முடிவு செய்திருந்தது.

இவை தொடர்பாகச் செய்தியாளர்கள் கேள்வி எழுப்பியபோதே கட்சியின் மத்திய குழுவே இணைந்து செயற்படுவது குறித்து முடிவுசெய்யும்என்றுமருத்துவர்சத்தியலிங்கம் தெரிவித்தார்.

புதிய அரசமைப்பு உருவாக்கப்பட்டு அதன் ஊடாக இனப்பிரச்சினைக்கான தீர்வு வழங்கப்பட வேண்டும் என்பதில் எமது கட்சி உறுதியாக உள்ளது.

ஆளும்தரப்பு புதிய அரசமைப்புக்கான பணிகளை முன்னெடுக்கின்றபோது நாடாளுமன்றத்தினை பிரதிநிதித்துவம் செய்கின்றஅதேபோன்றுநாடாளுமன்றத்தினை பிரதிநிதித்துவம் செய்யாத அனைத்துக் கட்சிகளும் ஒன்றிணைந்து தமிழ் மக்களின் தீர்வுத்திட்டத்தினை முன்வைத்து ஆளும்தரப்புடன்பேச்சுக்குச்செல்லவேண்டும் என்பது முக்கியமான விடயமாகும்.

இந்தவிடயம்சம்பந்தமாககட்சியின்மத்திய குழுக் கூட்டத்தில் நாங்கள் தீர்மானங்களை எடுப்பதற்கு காத்திருக்கின்றோம். டிசெம்பர் 14 கட்சியின்மத்தியகுழுக்கூட்டம்நடைபெறவுள்ள நிலையில் அந்தக் கூட்டத்தில் நாம் இது குறித்த தீர்மானங்களை எடுக்கவுள்ளோம்.

ஒன்றுபட்டுச் செயற்படுவதில் மாற்றுக்கருத்துக்கள் இல்லை. ஆனால் எவ்வாறு ஒன்றுபட்டுச் செயற்படுவது என்பது தொடர்பில் நாம் பேச்சு நடத்தி தீர்மானம் எடுக்க வேண்டியுள்ளது - என்றார்.

## பொருள் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்பான தரவுகளை அடிப்படையாகக் கொண்டு தீர்மானம் எடுத்தால் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணலாம்.

100 கிலோ கிராம் நெல்லில் இருந்து 62 கிலோ கிராம் அரிசியை உற்பத்தி செய்ய முடியும் என்று பிரதான அரிசி ஆலை உற்பத்தியாளர்கள் குறிப்பிடுகிறார்கள்.

மறுபுறம் விவசாயத்துறை அமைச்சு 100 கிலோ கிராம் நெல்லில் இருந்து 68 கிலோ கிராம் அரிசியை உற்பத்தி செய்யமுடியும் என்று குறிப்பிடுகிறது. பேராதனை பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சி பிரிவின் பேராசிரியர் மாரம்பே உட்பட ஆராய்ச்சியாளர்கள்72கிலோகிராம்அரிசியை உற்பத்தி செய்யலாம் என்றும், சிறு ஆலை உரிமையாளர்கள் 52 கிலோ பெற முடியும் என்று குறிப்பிடுகிறார்கள்.

மாறுப்பட்ட கருத்துக்களின் ஊடாக அரிசி விநியோகம் மற்றும் மொத்தக் கொள்வனவு தொடர்பில் அமைச்சருக்கோ, ஜனாதிபதிக்கோ போதுமான தெளிவு கிடையாது.

உணவு பாதுகாப்பு தொடர்பான முழுமையான அதிகாரம் வர்த்தகம், வாணிபம் மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சர் வசந்த சமரசிங்கவுக்கு வழங்கப்பட்டுள்ளது.

காட்டு யானைகளின் தாக்கத்தினால் பயிர்செய்கை நாசமடைந்து விட்டன. மாபியாக்கள் உணவு பொருட்களை பதுக்கி வைத்து விட்டனர் என்று பொறுப்பில்லாமல் பதிலளிக்கக்கூடாது.

இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படும் அத்தியாவசிய உணவுப் பொருட்கள் ஊடாக இடம்பெறும்மோசடிகளை இந்த ஆளும்தரப்பு இலகுப்படுத்தியுள்ளது.

மோசடியாளர்களுக்கு சாதகமான வகையில்இறக்குமதிக்கானவரையறைகளை நீக்கியுள்ளது. நாட்டு மக்களின் நிலை கருதி இந்த விடயத்தி; உரிய கவனம் செலுத்துமாறு ஆளும்தரப்பிடம் கேட்டுக் கொள்கிறோம்.

தேங்காய் தட்டுப்பாட்டுக்கு குரங்கு தொல்லை காரணம் என்று ஆளும்தரப்புக் குறிப்பிடுகிறது. பயிர்ச்செய்கைகளுக்குகி காட்டு விலங்குகளினால் பாதிப்பு ஏற்படுவதை ஏற்றுக்கொள்கிறோம்.

இருப்பினும் தேங்காய் தட்டுப்பாட்டுக்கு முற்றுமுழுவதுமாக குரங்குகளின் மீது பழி சுமத்த முடியாது. ஜேவிபி எதிர்க்கட்சியில் இருக்கும்போதுஅடிப்படைப்பிரச்சினைகளுக்குத் தாம் 24 மணித்தியாலத்துக்குள் தீர்வு காண்பர் என்று குறிப்பிட்டனர். ஆகவே வார்த்தையால்குறிப்பிட்டதுரிதத்தைசெயலால் காண்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம் - என்றார்.

## ஜெனரல் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாதுகாப்புஅமைச்சில்முறைபாடுசெய்துள்ளனர்.

2008ஆம் ஆண்டு அநுராதபுரத்தில் நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதலில் மேஜர் ஜெனரல் ஜானக்க பெரேராவும் அவரது மனைவி உள்ளிட்ட 28பேரும் கொலை செய்யப்பட்டனர்.

இவர் படைகளின் பிரதானியாக இருந்து ஓய்வு பெற்றதன் பின்னர் இராஜதந்திர சேவையில் சிலகாலம் பணியாற்றியதன் பின்னர் வடமத்திய மாகாண முதலமைச்சர் வேட்பாளராகவும் போட்டியிருந்தார்.

தேர்தல் பிரசார காலத்தில் அவரது பிரசார அலுவலகத்தில் நடந்த குண்டுவெடிப்பில் அவர் கொலை செய்யப்பட்டிருந்தார். இதனை விடுதலைப்புலிகளே நிகழ்த்தியதாக அப்போது கூறப்பட்டது.

எனினும் நேற்றையதினம் பாதுகாப்பு அமைச்சுக்கு வருகை தந்திருந்த அவரது சகோதாரர் உள்ளிட்டவர்கள் ஜானக்க பெரேரா வின் கொலையில் சந்தேகம் உள்ளதாக அவர்கள் தமது முறைப்பாட்டில் தெரிவித் துள்ளனர்.

## குரங்குகளை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுதந்திர கட்சி தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டதன்பின்னர்ஊடகங்களுக்குகருத்து வெளியிட்ட போது இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

எமது ஆட்சி காலத்தில் குரங்கு பிரச் சினை ஏற்பட்ட போது, சீன பிரதிநிதிகள் குழுவொன்றுடன் 3 பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றன. இதன் போது ஒரு இலட்சம் குரங்குகளை தமக்கு வழங்குமாறும் அவர்கள் கோரிக்கை விடுத்தனர். சீனாவி லுள்ளஆயிரக்கணக்கானதனியார்மிருககாட்சி சாலைகளுக்கு வழங்குவதற்காகவே அவர்களால் இந்த கோரிக்கை முன்வைக் கப்பட்டது.

இது குறித்த ஆவணங்கள் கூட பரிமாற்றிக் கொள்ளப்பட்டன. எவ்வாறிருப்பினும் சூழலியலாளர்கள் நீதிமன்றம் சென்றதால் எம்மால் அந்த நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்ல முடியவில்லை.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க விரைவில் சீனா செல்லவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இந்த விஜயத்தின் போது இவ்விடயம் தொடர்பில் இராஜதந்திர ரீதியில்பேச்சுவார்த்தைகளைமுன்னெடுத்தால் இந்த பிரச்சினைக்கு தீர்வு காண முடியும்.

சீனாவுக்கு குரங்குகளை வழங்கும் அதேவேளை, விவசாயத்துக்கு பாதிப்பை ஏற்படுத்தும் ஏனைய வன விலங்குகளை ஏனைய நாடுகளுக்கு வழங்க முடியும். இதன் ஊடாக இந்த பிரச்சினையிலிருந்து விடுபட முடியும் என்பதோடு, ஏனைய நாடுகளுடன் நட்புறவையும் வளர்த்துக் கொள்ள முடியும்.

அதேவேளை சூழலியலாளர்களும் இதற்கான தீர்வினை வழங்குவது குறித்து அரசாங்கத்துடன் துரித பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்க வேண்டும்.

குரங்குகளால் வருடத்துக்கு சுமார் 20 மில்லியன் தேங்காய்கள் இழக்கப்படுகின்றன.

தொடர்ச்சி 8ம் பக்கம்....

காலைக்கதிர் Kalaikkathir

# வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு அநுரவின் ஆட்சியிலாவது நீதி கிட்டட்டும்

## ரவிகரன் தெரிவிப்பு

இந்த நாட்டில் மாறி மாறி வந்த அரசாங்கங்கள் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் விவகாரத்தை கண்டுகொள்ளாத நிலையில், புதிதாக ஜனாதிபதியாக பொறுப்பேற்றுள்ள அனுர குமார திசாநாயக்கவின் ஆட்சியிலாவது வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான நீதி கிடைக்க வேண்டுமென வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் வலியுறுத்தியுள்ளார்.

சர்வதேசமனித உரிமை நாளான டிசெம்பர் 10ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முல்லைத்தீவு மாவட்ட வலிந்து காணாமாக்கப்பட்ட உறவுகள் நடத்திய கவனவீர்ப்பு போராட்டத்தில் கலந்துகொண்டு ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதேவேளை இலங்கை தமிழ் அரசு கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் அண்மையில் ஜனாதிபதியைச் சந்தித்தபோது வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம் தொடர்பிலும் அவரின் கவனத்துக்கு கொண்டு வந்திருப்பதாகவும் தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில் -

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் மிக நீண்ட நாள்களாக இந்த வீதிகளில் இறங்கி தொடார்ந்து ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

தங்களுடைய உறவுகளை வட்டுவாகல் பகுதியிலும் ஓமந்தையிலும் முகாம்களிலும் இன்னும் பல இடங்களிலும் கைதுசெய்த இராணுவத்தினர்,




கைதுசெய்தவர்களை திருப்பி ஒப்படைக்கவில்லை.

அத்தோடு கைதுசெய்து கொண்டு செல்லப் பட்டவர்கள் எங்கே எனவும் இராணுவத்தினர் சொல்லவில்லை.

இந்நிலையில் வடக்கு, கிழக்கில் எட்டு மாவட்டங்களையும் சேர்ந்த வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களது உறவினர்கள் தொடர் போராட்டத்துடன், கண்ணீரோடு தமது நாள்களை நகர்த்தி வருகின்றனர்.

இவர்களை மாறி மாறி வரும் அரசாங்கங்களும் கண்டுகொள்ளாத நிலையே தொடர்ந்தும் நீடிக்கிறது.

இந்நிலையில் கடந்த 04ஆம் திகதி தமிழ் அரசு கட்சியின் எட்டு நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஜனாதிபதியை சந்திக்கும்போது, வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் விடயம் தொடர்பாகவும் அவரிடம் பேசினோம்.

அவர் இந்த விடயம் தொடர்பில் பரிசீலனை செய்வதாகவும், கூடிய விரைவில் இதற்கான ஒரு வழியைஏற்படுத்தித்தருவதாகவும் தெரிவித்திருந்தார்.

அந்த வகையில் இந்த ஜனாதிபதியினுடைய ஆட்சியிலாவது வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான நீதி கிடைக்கவேண்டும்.

குறிப்பாக இந்த வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களைத் தேடி கண்ணீரோடு இந்த வீதிகளில் தொடர் போராட்டத்நில் ஈடுபட்டிருந்த பெற்றோர்கள் பலர் இறந்துபோன அவலங்களும் இங்கே நிகழ்ந்திருக்கிறது.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் கண்ணீருக்கு முன்னைய மஹிந்த அரசாங்கமானது பதில் சொல்லியே ஆகவேண்டும்.

தற்போது இந்த நாட்டைப் பொறுப்பேற்றுள்ள இந்த அரசாங்கம் பலத்த பெரும்பாண்மை பலத்தோடு இருக்கின்றனர்.

இந்த அரசாங்கத்தைச் சார்ந்தவர்களும் இந்த நாட்டில் ஒருகாலத்தில் போராட்டங்களில் ஈடுபட்டனர். அந்த வகையில் எமது போராட்ட வலியையும் அவர்களும் உணர்வார்கள் என நம்புகின்றோம்.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களை மீள ஒப்படையுங்கள் அல்லது அதற்கான பதிலைச் சொல்லுங்கள் என்றுதான் நாம் கேட்கின்றோம்.

இந்த உறவுகள் இன்னும் எவ்வளவு காலத்துக்கு உறவுகளைத் தேடி அலைவது?

இந்த உறவுகளுக்கான தீர்வை காலம் தாழ்த்தாமல் உடனடியாக வழங்கவேண்டும். அதற்காக நாம் தொடர்ந்து குரல் கொடுப்போம். - என்றார்.

# கற்பிட்டி வர்த்தகர்கள் ஆக்கிரிமித்துள்ள நடைபாதைகளை விடுவிக்க அறிவித்தல்

(சியாஜ்)

கற்பிட்டி நகர் புறங்களில் உள்ள வீதியின் இரு மருங்கிலும் மக்கள் நடைபாதை பகுதியில் வியாபார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவது அத்தோடு கடை உரிமையாளர்களால் வைக்கப்பட்டுள்ள வியாபாரப் பொருள்கள் மற்றும் விளம்பர பதாகைகள் என்பவற்றை அகற்றுமாறு கற்பிட்டி பிரதேச சபையால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு பொது மக்களின் நடைபாதைகளை ஆக்கிரமித்து சட்டவிரோதமாக வைக்கப்பட்டுள்ள சகல பொருள்களையும் எதிர்வரும் 13 ஆம் திகதிக்குள் அப்புறப்படுத்துமாறு கற்பிட்டி பிரதேச சபையால் பகிரங்க அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது .

இதனை மீறி செயற்படும் வர்த்தகர்களுக்கு எதிராக 13 ஆம் திகதிக்கு பின்னர் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் கற்பிட்டி பிரதேச சபையின் பகிரங்க அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.





# எதிர்கால மனித உரிமை மீறல்களை தடுக்க ஆணைக்குழு பரிந்துரைகளை வைத்துள்ளது

## அதன் கல்முனை இணைப்பாளர் அப்துல் அஸீஸ் உறுதி

(பாறுக் ஷிஹான்)

மனித உரிமை மீறப்பட்டவர்களுக்கு நீதி மற்றும் நியாயத்தை வழங்குவதையும் பொறுப்புள்ள தரப்பினரை பொறுப்புக் கூறவைப்பதன் மூலம் எதிர்கால மீறல்களை தடுக்கஇலங்கைமனிதஉரிமைகள்ஆணைக்குழு பரிந்துரைகளை மேற்கொண்டுள்ளது

மனித உரிமைகள் ஆணைக்குழு கல்முனை இணைப்பாளர் அப்துல் அஸீஸ் தெரிவிக்கையில் -





ஒரு மனிதன் பிறந்ததிலிருந்து அவன் உயிர் வாழும் காலம் வரைக்கும் அவனுக்கான உரிமை கூடவே இருக்கிறது. மனித உரிமைகள் பிரிக்க முடியாதவை என்பதால் இலங்கை அரசமைப்பு மூலம் அடிப்படை உரிமையில் உத்தரவாதமளிக்கப்பட்டுள்ளதால் மனித உரிமை மீறப்பட்டவர்களுக்கு நீதி மற்றும் நியாயத்தை வழங்குவதையும் பொறுப்புள்ள தரப்பினரை பொறுப்புக் கூறவைப்பதன் மூலம் எதிர்கால மீறல்களை தடுக்க இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு பரிந்துரைகளை மேற்கொண்டுள்ளது என மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கல்முனை பிராந்திய இணைப்பாளர் அப்துல் அஸீஸ் தெரிவித்தார்.

இலங்கைமனிதஉரிமைகள்ஆணைக்குழுவின் ஏற்பாட்டில் சர்வதேசமனித உரிமைக்தினத்தை சிறப்பிக்குமுகமாக செவ்வாய்க்கிழமை கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தில் பிராந்திய இணைப்பாளர் அப்துல் அஸீஸ் தலைமையில் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வின் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும் அங்கு கருத்துத் தெரிவித்த அவர் -

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் அரசாங்கத்தின் நிறைவேற்று அல்லது நிர்வாக நடவடிக்கை மூலம் ஏற்படும் அடிப்படை உரிமை மீறல்கள் தொடர்பான விசாரணைகள் நடத்தப்பட்ட பின்னர் நடப்பு ஆண்டில் ஆணைக்குழுவினால் செய்யப்பட்ட குறிப்பிடப்பட்ட சில பரிந்துரைகள் பற்றியும் ஆணைக்குழுவினால் அரசாங்க நிருவாக சுற்றிக்கை 22ஃ88 இன் அடிப்படையில் அங்கவீனமுற்றோர்களுக்கு தொழில் வழங்குதல் பற்றிய வழிகாட்டல்கள் பற்றியும் கருத்துத் தெரிவித்ததுடன் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு அடிப்படை உரிமை மீறல்கள் தொடர்பான முறைப்பாடுகளை ஆராய்ந்ததற்கமைய பரிந்துரைகளை வழங்குவதன் மூலம் உரிமை மீறப்பட்டவர்களுக்கு நீதி மற்றும் நியாயத்தை வழங்கும் நோக்காகக் கொண்டுள்ளது என்பதையும் பொறுப்புள்ள தரப்பினரை பொறுப்புக் கூற வைப்பதன் மூலம் மனித உரிமைகளை மதிக்கும் சமூகத்தை வளர்ப்பதன் மூலமும் எதிர்கால உரிமை உரிமை மீறல்களை தடுக்க இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு முனைப்புடன் செயற்பட்டு வருகிறது எனத் தெரிவித்தார்.

மேலும் இந்நிகழ்வில் பிரதம அதிதியாக இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக பீடாதிபதி பேராசிரியர் கலாநிதி எம்.எம். பாசில் கலந்துகொண்டார்.

அத்துடன் ஆணைக்குழுவால் பரிந்துரைக்கப்பட்ட வழிகாட்டல்கள் மற்றும் அறிக்கைகள் பிரதம அதிதி பிரதேச செயலாளர் மற்றும் சிவில் அமைப்பு பிரதிநிதிகளுக்கு வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## வெளிப்படைத்தன்மை அவசியம்

ஊடகங்களை வெளியாட்களாக கருதாமல், சிறந்த அரசை கட்டியெழுப்புவதற்கும், அனைத்து மக்களதும் வாழ்க்கையை மேம்படுத்துவதற்குமான முயற்சியின் ஓர் அங்கமாகவே தாம் கருதுகின்றார் என்று அரசுத் தலைவர் அநுரகுமார திசநாயக்க வலியுறுத்தியிருந்தார். இலத்திரனியல் ஊடக நிறுவனங்களின் பிரதானிகளை தனது செயலகத்தில் கடந்த வாரம் சந்தித்தபோதே அவர் இதனைத் தெரிவித்திருந்தார்.

மக்கள் நல்லதொரு அரசியல் கலாசாரத்தை எதிர்பார்க்கின்றனர் எனவும், அந்த எதிர்பார்ப்பை நிறைவேற்றும் வகையிலேயே தற்போதைய ஆளும்தரப்புத் தெரிவுசெய்யப்பட்டுள்ளதாகவும் அரசுத் தலைவர் தெரிவித்தார் என அவரது ஊடகப் பிரிவு (PMD) தெரிவித்திருந்தது. மக்கள் விரும்பும் புதிய அரசியல், சமூக மற்றும் பொருளாதார மாற்றங்களை வளர்ப்பதில் ஒத்துழைக்க அனைத்து ஊடக நிறுவனங்களுக்கும் அவர் அழைப்பு விடுத்திருந்தார்.

தேசிய மக்கள் சக்தி ஆட்சி அதிகாரத்தைப் பிடித்த பின்னர், ஊடகங்களை அடக்கி ஒடுக்க அது முயற்சிக்கிறது என்கிற குற்றச்சாட்டை எதிர்க் கட்சிகள் சுமத்திவரும் நிலையில் அரசுத் தலைவர் இந்தக் கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார். மாவீரர் தினத்தையொட்டி முகப் புத்தகத்தில் பதிவிட்டவர்களைக் கைது செய்த பின்னணியில் ஆளும்தரப்பு கருத்துச் --சுதந்திரத்தையும் வெளிப்பாட்டுச் சுதந்திரத்தையும் தடைசெய்கிறது என்கிற குற்றச்சாட்டுக்களும் கிளம்பியிருந்தன.

இந்த நிலையில் வெளிப்படுத்தப்பட்டுள்ள அரசுத் தலைவரின் கருத்துக்கள் சிறப்பானவை. அவருக்கு வழங்கப்பட்டுள்ள மக்கள் ஆணையானது கடந்த காலத்தில் ஆட்சி செய்த இழிவான அரசியல் கலாசாரத்தை மாற்றுவதற்காகவே வழங்கப்பட்டது என்பதை அரசுத் தலைவரே பல தடவைகள் தெரிவித்திருக்கிறார். அந்த மாற்றம் உண்மையாக வேண்டும் என்றால் இலங்கையில் கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரமும் ஊடக சுதந்திரமும் மிக முக்கியமாகப் பாதுகாக்கப்படவேண்டும்.

தேசிய மக்கள் சக்தி ஆளும்தரப்பு அதிகாரத்திற்கு வந்தது முதல் அரச தரப்புத் தகவல்களை வெளியே எடுப்பதற்குக் கடினமான நிர்வாகங்களில் ஒன்றாக மாறியிருக்கிறது. விரைவில் மாற்றம் வரும் என்றும், எதிர்க்கட்சியில் இருந்தபோது தேசிய மக்கள் சக்தியினர் கூறிய வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறல்கள் விரைவில் நடைமுறைக்கு வரும் என்றும் எதிர்பார்க்கிறோம்.

பத்திரிகைகள் மற்றும் ஊடக நிறுவனங்கள் முக்கிய அரச அதிகாரிகளை அணுகுவதற்கும், பொது நலனுக்காகத் தகவல்களைப் பெறுவதற்கும் உள்ள வசதி என்பது ஜனநாயக நிர்வாகத்தில் மிக முக்கியமானது. ஆனால் அண்மைக் காலமாக அத்தகைய வசதி என்பது மிகவும் சவாலானதாக மாறியுள்ளது. போதிய தகவல்களைப் பெறமுடியாமல் ஊடகங்கள் பட்டினி கிடக்கின்றன.

இந்த நிலமை மக்களுக்குச் சரியான தகவல்கள் குறைவாகவே கிடைப்பதற்கு வழிவகுகின்றது. அதற்குப் பதிலாக சமூக ஊடகங்களில் தனிமனிதர்கள் கதைகளை அவிழ்த்துவிடுவதற்கான வாய்ப்புக்களை அதிகரிக்கின்றது. வெளிப்படைத்தன்மை மற்றும் துடிப்பான ஊடக நிலப்பரப்பு நல்லாட்சிக்கு இன்றியமையாதது என்றபோதும் அதற்கான வெளி குறைந்து வருவதாக உணரமுடிகின்றது.

தேசிய நல்லிணக்கத்திற்கு பங்கம் விளைவிக்கக் கூடிய பொய்யான தகவல்களை வெளியிடுவதை தவிர்க்குமாறு அரசுத் தலைவர் இலத்திரனியல் ஊடகப் பொறுப்பாளர்களிடம் வலியுறுத்தியிருந்தார். அரசியல் மற்றும் பொருளாதார விடயங்களில் ஆளும்தரப்பைக் கேள்வி கேட்கவோ அல்லது விமர்சிக்கவோ ஊடகங்களுக்கு உரிமை உண்டு என்பதை உறுதிப்படுத்திய அவர், பொறுப்பான அறிக்கையின் முக்கியத்துவம் குறித்தும் வலியுறுத்தினார்.

இலங்கையின் பல தசாப்த கால மோதல்களின் வரலாற்றை நினைவு கூர்ந்த அவர், இனவாதத்தை மீண்டும் ஒருபோதும் அனுமதிக்கப் போவதில்லை எனவும் உறுதியாகத் தெரிவித்தார். ஊடக சுதந்திரத்தை எந்த வகையிலும் சமரசம் செய்யவோ அல்லது கட்டுப்படுத்தவோ மாட்டோம் என்றும் அவர் உறுதியளித்துள்ளார். ஆனால், அவரது ஆளும்தரப்பு நாடாளுமன்றத்திற்கு வெளியே வாயடைத்துப்போய் உள்ளது. ஊடகங்கள் தகவல்களைப் பெறுவதற்கு அமைச்சரவை செய்தித் தொடர்பாளர் என்ற ஒரேயொரு அதிகாரப்பூர்வ தகவல் வழி மட்டுமே இருப்பதால், ஒட்டுமொத்த அரசு இயந்திரமும் 'இருண்டுவிட்டது' போல் காட்சிளிக்கின்றது. இது ஒரு நல்ல ஜனநாயகத்திற்கான ஆரோக்கியமான பார்வை அல்ல.

கடந்த ஆட்சிகளின்போது தொழிற்சங்கங்கள் ஆளும் தரப்பை விமர்சிப்பதிலும் கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரத்தைப் பாதுகாப்பதிலும் முன்னின்று செயற்பட்டிருக்கின்றன. ஆனால், இன்று அவை அனைத்தும் வாய்மூடி இருக்கின்றன. தேசிய மக்கள் சக்திக்குள் பல தொழிற்சங்கங்களும் இணைக்கப்பட்டுள்ள காரணத்தால் இன்றைய ஆளும்தரப்பை விமர்சித்தால் பழிவாங்கப்படுவோமோ என்று அவை அஞ்சுகின்றன. இதனால் தங்களைத் தாங்களே தணிக்கை செய்யத் தொடங்கியுள்ளன. இந்த நிலமை ஒப்பீட்டளவில் கருத்து வெளிப்பாட்டின் மீதான அறிவிக்கப்படாத கட்டுப்பாடாகத்தான் தெரிகிறது. இது ஆரோக்கியமான ஜனநாயகப் பண்பல்ல.

தேசிய மக்கள் சக்திக்கு மக்கள் வழங்கியிருக்கக்கூடிய அதீத ஆதரவு என்பது கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரத்தின் மீதான கட்டுப்பாடாக ஒருபோதும் பரிணமிக்க முடியாது. ஊடகத் துறையால் கவனிக்கப்பட வேண்டிய சிக்கல்கள் உள்ளன. பத்திரிகையாளர்கள் மீது கல்லெறிவதும், தகவல்களைக் கட்டுப்படுத்துவதும் இதுபோன்ற பிரச்சினைகளுக்குத் தீர்வாகாது.

அரசுத் தலைவர் பேச்சில் கூறுவதை நடைமுறைப்படுத்த வேண்டும். அமைச்சுகள் மற்றும் அரச நிறுவனங்களுக்கு அவற்றின் தொடர்புடைய பேச்சாளர்களைவைத்திருக்க அறிவுறுத்தவேண்டும், மேலும் அமைச்சர்கள் ஊடகங்களுக்கு செய்தி வழங்குவதற்கு தயக்கம் காட்டக்கூடாது. சமூக ஊடகங்கள் மட்டுமே மக்களுக்குத் தேவையான போதிய தகவல்களை வழங்கிவிடமாட்டா. ஊடக அறமும் தொழில் நேர்த்தியும் உள்ள பாரம்பரிய ஊடகங்களும் இலங்கையின் ஜனநாயகத்திற்கு மிகவும் இன்றியமையாதன என்பதை உணர்ந்துகொண்டு செயற்படுவது மிக அவசியம்.

# புயலையும் சூறாவளியையும் எதிர்கொள்ள நாம் தயாரா?

பரம்பரைபரம்பரையாக இலங்கையர்கள் இயற்கையின் தாளங்களோடு இயைந்தே வாழ்ந்து வருகின்றனர். நமது பயிர்களைத் தாங்கும் பருவமழை மற்றும் நமது வெப்பமண்டலநிலப்பரப்பைவரையறுக்கும் கடலோரக் காற்று ஆகியவை எப்போதும் நம் அடையாளத்தின் ஒரு பகுதியாகும். ஆனால், இந்த சமநிலை இப்போது மாறுகிறது. காலநிலை மாற்றம் தீவிரமாகி விரைவாகி வருகையில், உயிர்கள், சமூகங்கள் மற்றும் நிலப்பரப்புகளை மறுவடிவமைக்கும் சக்தியுடன் கூடிய சூறாவளி, கொடூரமான புயல்களும் அவற்றால் ஏற்படும் அச்சுறுத்தலும் அதிகரிக்கின்றது.

உருவாகும் அவை, கடலின் வெப்பத்திலிருந்து ஆற்றலைப் பெறுவதால் கட்டுங்கடங்கா வலிமை பெறுகின்றன. மணிக்கு 157 மைல் வேகத்தில் வீசும் காற்று, பலத்த மழை மற்றும் புயல் எழுச்சி ஆகியவற்றால் வகைப்படுத்தப்படும் சூறாவளிகள் பேரழிவை ஏற்படுத்துகின்றன. உலக வெப்பநிலை அதிகரித்து வருவதால், இந்த புயல்கள் மேலும் தீவிரமடைந்து வருகின்றன. உலகளாவிய வெப்பநிலையில் ஒவ்வொரு 1 டிகிரி செல்சியஸ் அதிகரிப்பும் சூறாவளிகளைத் தீவிரப்படுத்துகிறது, அவற்றின் காற்றின் வேகம், மழைப்பொழிவு மற்றும் புயல் அலைகளை அதிகரிக்கிறது



இத்தகைய புயல்கள் பாரம்பரியமாக உலகின் பிற பகுதிகளுடனேயே கடந்த காலங்களில் தொடர்புடையனவாக இருந்தன. அதிகரித்துவரும் கடல் வெப்பநிலை மற்றும் மாறிவரும் பருவகால முறைகள் என்பன புயல்களையும் சூறாவளிகளையும் எமது கடற்கரைக்கு நெருக்கமாகக் கொண்டுவந்துள்ளன. இலங்கையர்களுக்கு இனிச் சூறாவளிகள் இனி ஒரு தொலைதூரக் கவலை இல்லை; அதுவே உண்மை.

இந்த நேரத்தில் எம்மை நாமே கேட்க வேண்டிய கேள்வி என்னவென்றால், வரவிருக்கும் ஆபத்துக்களை எதிர்கொள்வதற்கு நாம் தயாராக இருக்கிறோமா என்பதுதான்.

கடந்த சில ஆண்டுகளில் நமது நாட்டில் ஏற்பட்டுள்ள பருவகால ஆபத்துக்கள் ஒரு முக்கியமான எச்சரிக்கையை வழங்குகின்றன. கடந்த சில நாட்களில் மட்டுமே 2 லட்சத்து 30 ஆயிரத்துக்கும் அதிகமான மக்கள் கனமழை மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர், 15 ஆயிரத்துக்கும் மேற்பட்ட நபர்கள் தங்கள் வீடுகளை விட்டு இடம்பெயர்ந்துள்ளனர். வீடுகளுக்குள் வெள்ளம் புகுந்ததால் அனைத்துக் குடும்பங்களும் தற்காலிக தங்குமிடங்களில் தஞ்சம் புகுந்தனர். சாலைகள் நீரில் மூழ்கின, மண்சரிவுகள் ஏற்பட்டன. தொடருந்து சேவைகள் முடங்கின. அத்தியாவசிய சேவைகளிலிருந்து சமூகங்கள் துண்டிக்கப்பட்டன. பொருளாதார பாதிப்பும் திகைப்பூட்டுவதாக இருந்தது, மனிதப் பேரவலங்கள் இன்னும் ஆழமாக இருந்தன. அம்பாறையில் நான்கு பாடசாலை மாணவர்கள் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டு உயிரிழந்துள்ளனர்; இந்தப் பேரழிவுகள் வெறும் தொடக்கம்தான். புயல்களும் சூறாவளிகளும் நம்மைத் தொடர்ந்து தாக்கத் தொடங்கினால், அழிவு முன்னெப்போதும் இல்லாத அளவை எட்டக்கூடும்.

சூறாவளி பூமியில் மிகவும் சக்திவாய்ந்த மற்றும் அழிவுகரமான பருவ நிலைகளில் ஒன்றாகும். வெதுவெதுப்பான கடல் நீரில் என்று காலநிலை மாற்றத்திற்கான அரசுகளுக்கிடையேயான குழு (IPCC) கண்டறிந்துள்ளது.

உலக வெப்பமயமாதல் காரணமாக வெப்ப நீரால் தூண்டப்படும் சூறாவளிகள் இனி இந்தியப் பெருங்கடல் மற்றும் வங்காள விரிகுடாவில் அடிக்கடி ஏற்படும் என்பதே யதார்த்தமாகி வருகின்றது. அச்சுறுத்தல் கடற்கரையில் மட்டும் இல்லை. கொழும்பு, திருகோணமலை மற்றும் காலி போன்ற நகரங்களும் இனிவரும் காலங்களில் புயல் அலைகளால் பாதிக்கப்படக்கூடியவை.

இந்தக் கரையோர நகரங்கள் மட்டுமல்ல நாட்டின் உள்பகுதிகளும் இந்தக் காலநிலை பருவ மாற்றங்களால் அபாயத்தை எதிர்கொள்கின்றன. தொடர் மழையால் ஆறுகள் பெருக்கெடுத்து ஓடுவதால் கிராமங்கள் மற்றும் நகரங்கள் முழுவதும் வெள்ளத்தில் மூழ்கும். இரத்தினபுரி போன்ற பகுதிகளில் ஏற்கனவே மழைக்காலங்களில் வெள்ளப்பெருக்கு ஏற்படுவது வழமையான நிகழ்வாகும். சூறாவளி இந்த நிகழ்வுகளை பெருக்கி, ஏற்கனவே உடையக்கூடிய வடிகால் அமைப்புகளை மூழ்கடித்து ஆயிரக்கணக்கானவர்களை இடம்பெயரச் செய்யும்.

செங்குத்தான சரிவுகள் மற்றும் பாதிக்கப்படக்கூடிய குடியிருப்புகள் கொண்ட மலைநாடு, மேலும் ஆபத்தில் உள்ளது. கனமழையால் ஹப்புத்தளை மற்றும் நுவரெலியா போன்ற பகுதிகளில் நிலச்சரிவுகள் ஏற்படலாம், சமூகங்களுக்கு ஆபத்து ஏற்படலாம் மற்றும் முக்கியமான உள்கட்டமைப்புகள் துண்டிக்கப்படலாம்.

சூறாவளிகளின் உடனடி மற்றும் ஆபத்தான விளைவுகளில் ஒன்று அவை நமது சுற்றுச்சூழலுக்கு ஏற்படுத்தும் சேதம். நமது தீவின் இயற்கைச் சுற்றுச்சூழல் அமைப்புகள் தீவிர வானிலைக்கு எதிராக நீண்ட காலமாக இடையகமாக செயல்பட்டு வருகின்றன. சதுப்புநிலக் காடுகள்

தொடர்ச்சி 5ம் பக்கம்...........

# நாம் தயாரா?

4ம் பக்கத் தொடர்ச்சி...........

கடலோரப் பகுதிகளை புயல் அலைகளிலிருந்து பாதுகாக்கின்றன, ஈரநிலங்கள் அதிகப்படியான மழையை உறிஞ்சுகின்றன, மேலும் பவளப்பாறைகள் உள்வரும் அலைகளின் ஆற்றலை உடைக்கின்றன.

ஆயினும்கூட, இந்த முக்கியமான சுற்றுச்சூழல் அமைப்புகளும்கூட ஆபத்தில் உள்ளன என்பதுதான் கவலைக்குரியது. உதாரணமாக, சதுப்புநிலக் காடுகள் ஆபத்தான விகிதத்தில் அபிவிருத்தி என்ற பெயரில் அழிக்கப்பட்டு வருகின்றன. கடலோரப் பகுதிகளைச் சுற்றி, சதுப்பு நிலங்களின் இழப்பு கடலோர அரிப்பைத் துரிதப்படுத்தியது மற்றும் வெள்ளப்பெருக்கின் பாதிப்பை அதிகரித்துள்ளது. இந்த இயற்கை பாதுகாப்பு இல்லாமல், சமூகங்கள் சூறாவளியின் முழு சக்தியையும் வெளிப்படுத்துகின்றன.

சூறாவளிகளால் ஏற்படும் சுற்றுச்சூழல் சேதம் அவற்றின் உடனடி தாக்கத்திற்கு அப்பாற்பட்டது. புயல் அலைகள் விவசாய நிலங்களை உப்புநீரால் மூழ்கடித்து, பல ஆண்டுகளாக உற்பத்தி செய்யாமல் இருக்கும். சதுப்பு நிலங்கள் மற்றும் நன்னீர் அமைப்புகள் மாசுபடுத்தப்பட்டு, சுற்றுச்சூழல் அமைப்புகளின் நுட்பமான சமநிலையை சீர்குலைத்து, பல்லுயிர்களை அச்சுறுத்தும். அதிகரித்து வரும் கடல் வெப்பநிலையால் ஏற்கனவே வலியுறுத்தப்பட்ட பவளப்பாறைகள், புயல் அலைகளின் கொந்தளிப்பால் மேலும் சீரழிவை சந்திக்க நேரிடும். இந்த மாற்றங்களின் சிற்றலை விளைவுகள் ஆழமானவை, மீன் வளங்கள் முதல் நீரின் தரம் வரை அனைத்தையும் பாதிக்கின்றன, இறுதியில், இந்த வளங்களை நம்பியிருப்பவர்களின் வாழ்வாதாரம்.

சூறாவளியின் பொருளாதார தாக்கம் நம்மீது திகைக்க வைக்கும். மக்கள்தொகையில் கிட்டத்தட்ட கால்பகுதியினர் வேலைசெய்யும் விவசாயம் குறிப்பாக பாதிக்கப்படக்கூடியது. விவசாய நிலங்களுக்குள் உப்பு நீர் ஊடுருவுவது பயிர்களை அழித்து நடவு சுழற்சியை சீர்குலைக்கும், அதே நேரத்தில் கனமழை முழு அறுவடைகளையும் கழுவிவிடும். மீன்வளம் இதே போன்ற சவால்களை எதிர்கொள்கிறது. சேதமடைந்த படகுகள் மற்றும் மீன்பிடி சாதனங்கள் சமூகங்களை வேலைசெய்ய முடியாமல்போய்விடுகிறது. ஆசிய வளர்ச்சி வங்கி (ADB) காலநிலை தொடர்பான பேரழிவுகள் ஆண்டுதோறும் நமது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 1.2% செலவாகும் என்று மதிப்பிடுகிறது, இது சூறாவளி ஒரு வழக்கமான நிகழ்வாக மாறினால் கணிசமாக உயரக்கூடும். பொருளாதார நிச்சயமற்ற நிலையில் சிக்கித் தவிக்கும் ஒரு தேசத்திற்கு, இது நம்மால் தாங்க முடியாத சுமை.



நிதிச் செலவுக்கு அப்பால், சூறாவளிகள் பெரும் சமூகப் பாதிப்பை ஏற்படுத்துகின்றன. இடப்பெயர்வு குடும்பங்களை வேரோடு பிடுங்குகிறது, அவர்களை தற்காலிக தங்குமிடங்களுக்கு கட்டாயப்படுத்துகிறது, அங்கு அவர்கள் அடிக்கடி நெரிசல் மற்றும் போதுமான வளங்களை எதிர்கொள்கிறார்கள். பள்ளிகள் மூடப்பட்டுள்ளன, சுகாதாரம் சீர்குலைக்கப்பட்டுள்ளது, மேலும் சமூகங்கள் புதிதாக மீண்டும் கட்டமைக்கப்பட்டுள்ளன. பாதிக்கப்பட்டவர்கள், குறிப்பாக குழந்தைகள் மற்றும் முதியவர்கள் மீதான உணர்ச்சித் திரிபு மிகப்பெரியது. ஒரு வீட்டை, வாழ்வாதாரத்தை அல்லது நேசிப்பவரை இழப்பது, காணக்கூடிய அழிவை விட மிக ஆழமான வடுக்களை விட்டுச்செல்கிறது.



அதிகரித்துவரும் இந்த அச்சுறுத்தலை எதிர்கொண்டு, மக்களாகிய நாம் தீர்க்கமாகச் செயல்படவேண்டும். நமது இயற்கைச் சுற்றுச்சூழல் அமைப்புகளைப் பாதுகாத்தல், ஏற்கனவே சேதப்படுத்தியதை மீட்டெடுப்பது சூறாவளிகளின் தாக்கத்தைத் தணிக்க மிகவும் பயனுள்ள வழிகளாகும். சதுப்புநில மறு நடவு முயற்சிகள் சரியான திசையின் ஒரு படியாகும், ஆனால் அவை தீவு முழுவதும் அளவிடப்படவேண்டும். சதுப்பு நிலங்கள் மற்றும் பவளப்பாறைகளில் அவசர கவனம் தேவை. இந்த சுற்றுச்சூழல் அமைப்புகள் சுற்றுச்சூழல் சொத்துக்கள் மட்டுமல்ல; அவை இயற்கையின் சக்திகளுக்கு எதிரான நமது முதல் வரிசைப் போராளிகளாகும்.

வரவுள்ள இயற்கைச் சவால்களை எதிர்கொள்ள உள்கட்டமைப்பும் பலப்படுத்தப்படவேண்டும். தீவிர வானிலை நிகழ்வுகளைத் தாங்கும் வகையில் சாலைகள், பாலங்கள் மற்றும் வடிகால் அமைப்புகள் மேம்படுத்தப்படவேண்டும். வெள்ளத் தடைகள் மற்றும் முன்னெச்சரிக்கை அமைப்புகளால் உயிர்களைக் காப்பாற்ற முடியும், அதேசமயம் சமூகங்களுக்கான பேரிடர் தயார்நிலைப் பயிற்சியில் முதலீடு செய்வது, சூறாவளி தாக்கும்போது மக்கள் அதனை எவ்வாறு எதிர்கொள்வது என்பதை அறிந்திருப்பதை உறுதி செய்வதும் அவசியம். பேரழிவின் போது வாழ்க்கைக்கும் இறப்புக்கும் இடையில் வித்தியாசத்தை ஏற்படுத்தக்கூடிய அறிவை மக்களிடம் ஏற்படுத்துவதற்கு கல்வியே மிக முக்கியமான ஊடகங்களாகும்.

சூறாவளிக்கு மூல காரணமான காலநிலை மாற்றத்தை நிவர்த்திசெய்வது எல்லாவற்றிலும் மிக முக்கியமான சவால். புதுப்பிக்கத்தக்க ஆற்றலுக்கான நமது மாற்றத்தை விரைவுபடுத்துவதும் பசுமைக்குடில்வாயு வெளியேற்றத்தைக் குறைப்பதும் அந்தச் சவாலை எதிர்கொள்வதற்கான முக்கிய வழிகள். இதற்கான நிரந்தரமான திட்டங்கள் உருவாக்கப்படவேண்டும். உலகளாவிய கூட்டாண்மை மற்றும் நிதியுதவிகளைப் பெற்று இந்த முயற்சிகளைத் தீவிரப்படுத்தவேண்டும். ஆனால் உண்மையான மாற்றம் உள்ளிருந்து வரவேண்டும். அதற்கு முன்னுரிமை கொடுக்கும் கொள்கைகள் அவசியம்.



முன்னோக்கிச் செல்லவேண்டிய பாதை அச்சுறுத்தலாக இருந்தாலும், நம்பிக்கை இல்லாமலும் இல்லை. ஒரு சிறிய தீவு நாடு கூட காலநிலை நெருக்கடியை எதிர்கொள்ள தைரியமான நடவடிக்கைகளை எடுக்க முடியும் என்பதை நிரூபிக்கும் வகையில், முன்மாதிரியாக எம்மை நாமே வழிநடத்த எங்களுக்கு ஒரு தனித்துவமான வாய்ப்பு உள்ளது. இன்று நாம் எடுக்கும் முடிவுகள் நாளைய இலங்கையை வடிவமைக்கும். நம் மக்களையும் நமது சுற்றுச்சூழலையும் பாதுகாத்து, இலங்கையை மீட்டெடுப்பதில் முதலீடு செய்வோமா அல்லது செயலற்றிருந்து, உண்மையான பேரழிஎன்ன என்பதை உணர, முதல் சூறாவளி தாக்கும் வரை காத்திருப்போமா?

மாற்றத்தின் காற்று ஏற்கனவே நம்பக்கமே உள்ளது, புயல் நாம் நினைப்பதைவிட எமக்கு நெருக்கமாக உள்ளது. சூறாவளி வருமா என்பது கேள்வி அல்ல, அவற்றை எதிர்கொள்ள எப்போது, எப்படி தயாராக இருக்கிறோம் என்பதுதான் கேள்வி. நாம் இப்போது செயல்படலாமா அல்லது புயல் நம்மை ஆயத்தமில்லாமல் பிடிக்க அனுமதிப்போமா? வருங்காலச் சந்ததியினருக்கு நாம் விட்டுச்செல்லும் பாரம்பரியத்தை அந்தப் பதில் வரையறுக்கும்.

# டிக்கோயா ஆற்றுப்பகுதியில் சட்டவிரோதமாக மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுப்பட்ட 6 பேர் கைது

(கிஷாந்தன்)

காசல்ரீ நீர்த்தேக்கத்திற்கு நீர்வழங்கும் டிக்கோயா ஆற்றுப்பகுதியில், சட்டவிரோதமான முறையில் மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுப்பட்ட ஆறு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என ஹற்றன் பொலிஸார் தெரிவித்தனர்.

அத்தோடு, மாணிக்ககல் அகழ்வதற்குப் பயன்படுத்தப்பட்ட சில உபகரணங்களும் மீட்கப்பட்டுள்ளன எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

ஹற்றன் - டிக்கோயா வனராஜா தேயிலை தொழிற்சாலைக்கு பின்புறம் உள்ள டிக்கோயா ஆற்றுப்பகுதியில் சிலர் சட்டவிரோதமான முறையில் மாணிக்ககல் அகழ்வதாக கிடைத்த இரகசிய தகவலையடுத்து ஹற்றன் பொலிஸார் சுற்றிவளைப்பு மேற்கொண்டு சந்தேக நபர்களை கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் இரத்தினபுரி, கஹவத்தை, பலாங்கொடை, ஹற்றன் மற்றும் டிக்கோயா ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 25-40 வயதுக்குட்பட்டவர்கள் எனவும், கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் ஹற்றன் நீதிவான் நீதிமன் றில் ஆஜர்படுத்தப் படவுள்ளதாகவும் சுற்றிவ ளைப்பை மேற்கொண்ட பொலிஸார் தெரிவித்தனர்.

# கணவன் கூரிய ஆயுதத்தால் தாக்கி மனைவி உயிரிழப்பு

மாத்தளை, லக்கலை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட லக்கேகல பிரதேசத்தில் கணவனால் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு மனைவி கொலை செய்யப்பட்டுள்ளார் என லக்கலை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் செவ்வாய்க்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

கொலை செய்யப்பட்டவர் மாத்தளை, லக்கேகல பிரதேசத்தைச் சேர்ந்த 44 வயதுடைய மனைவி ஆவார்.

கணவன், மனைவிக்கு இடையில் ஏற்பட்ட தகராறு காரணமாக இந்த தாக்குதல் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதனையடுத்து சந்தேக நபரான கணவன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

# புத்தளம் விற்பனை நிலையத்தில் திருட்டு சந்தேகநபர் போதைப்பொருளுடன் கைது

புத்தளம், தங்கொட்டுவ பிரதேசத்தில் உள்ள விற்பனை நிலையம் ஒன்றின் கதவை உடைத்து பணம் மற்றும் நகைகளைத் திருடிச் சென்றதாக கூறப்படும் சந்தேக நபரொருவர் போதைப்பொருளுடன் செவ்வாய்க்கிழமை பிற்பகல் கைது செய்யப்பட்டுள்ளார் என தங்கொட்டுவ பொலிஸார் தெரிவித்தனர்.

தங்கொட்டுவை பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர் புத்தளம், தங்கொட்டுவ பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் லுனுவில பிரதேசத்தைச் சேர்ந்த 43 வயதுடையவர் ஆவார்.

சந்தேக நபர் கடந்த 09 ஆம் திகதி தங்கொட்டுவ பிரதேசத்தில் உள்ள விற்பனை நிலையம் ஒன்றை உடைத்து 800,000 ரூபா பணம் மற்றும் 1,490,000 ரூபா பெறுமதியான தங்க நகைகளைத் திருடிச் சென்றுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடமிருந்து 05 கிராம் 200 மில்லி கிராம் ஹெரோயின் போதைப்பொருள், தங்கச் சங்கிலி , தங்கத் தோடுகள், தங்க மோதிரம், தங்க வளையல் மற்றும் 461,950 ரூபா பணம் என்பன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை தங்கொட்டுவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# தேர்தல் நிதி முறைகேடா? வவுனியாவில் விசாரணை

தேர்தல் நடவடிக்கைகாக வவுனியாவிற்கு ஒதுக்கப்பட்ட நிதியில் முறைகேடுகள் இடம்பெற்றுள்ளதா என விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

நடைபெற்று முடிந்த ஜனாதிபதித் தேர்தல் மற்றும் நாடாளுமன்றத் தேர்தல் என்பவற்றின் செலவீனத்திற்காக வவுனியா மாவட்ட செயலகத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதியில் முறைகேடுகள் இடம்பெற்றுள்ளன எனக் கிடைக்கப் பெற்ற தகவல்களுக்கு அமைய விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதன் ஒரு கட்டமாக வவுனியா மாவட்ட தேர்தல் திணைக்களப் பிரிவில் கடமையாற்றும் அதிகாரிகள் கொழும்புக்கு அழைக்கப்பட்டு அவர்களிடம் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (100, 05)



காலைக்கதிர் Kalaikkathir

# சர்வதேச ரீதியிலான 'புதிய வானம்' விருது விழாவில் மாவடிப்பள்ளி மஜினா உமறுலெவ்வை கௌரவிப்பு

(ஸாகிர்)

புதிய வானம் மக்கள் நல அறக்கட்டளை மற்றும் கிரீன்சேனல்கல்விநிறுவனம் இணைந்து நடத்திய புதிய வானம் விருது வழங்கும் விழா- 2024 ஹொரணை ரந்தாரா மண்டபத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை தனலட்சுமிமாதவன்மற்றும் மணிஸ்ரீகாந்தன்ஆகியோரின் நெறிப்படுத்தலின் கீழ் வெகு விமர்சையாக நடைபெற்றது.



இவ் விருதுக்கு இலங்கை, இந்தியா, சிங்கப்பூர், மலேசியா மற்றும் ஐரோப்பிய நாடுகளிலிருந்து நூற்றுக்கணக்கானோர் விண்ணப்பித்திருந்தனர். இதில் நடுவர் குழுவினரால் சில ஆளுமைகள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களுக்கான விருதுகள் வழங்கப்பட்டன. இதன் போது மாவடிப்பள்ளி யூ.எல்.யூ. மஜினாவினைத் தெரிவுசெய்து'சிறந்தபத்திரிகையாளர்'எனும் சிறப்பு விருதை வழங்கிக் கௌரவித்தனர்.

இந்நிகழ்வில், பிரதம அதிதிகளாக இலக்கியப் புரவலர் ஹாசிம் உமர் மற்றும் கனடாவைச் சேர்ந்த கலாநிதி நரேந்திரன் விவேகானந்தா ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்தியாவிலிருந்து பல ஆளுமைகள் வருகை தந்து நிகழ்வைச் சிறப்பித்தனர். இலங்கையின் முன்னணி நடிகை, செய்தி வாசிப்பாளர் நிரஞ்சனிசண்முகராஜா மற்றும் பல இலங்கை, இந்திய ஆளுமைகள் நிகழ்வில் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

சர்வதேச ரீதியில் பல ஆளுமைகளுக்கு விருது வழங்கி கௌரவிக்கப்பட்ட இந்நிகழ்விலே, மாவடிப்பள்ளி யூ.எல்.யூ. மஜினாவுக்கு 'சிறந்த பத்திரிகையாளர்' எனும் சிறப்பு விருதும், சான்றிதழும்' வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

இவர்கட்டாரில்வெளிவரும்துணிந்தெழு சஞ்சிகையில் இணையாசிரியராக செயற்பட்டு வருவதோடு, இந்தியாவில் சென்னையில் வெளிவரும் மணி மகுடம் சஞ்சிகையிலும் இணையாசிரியராக செயற்படுகிறார்.




# பாடசாலைகளின் தேவைகளை நிவர்த்திசெய்யும் அஷ்ரப் தாஹிர்

(சினீஸ் கான்)

பாடசாலைகளின் தேவைகள், குறைபாடுகளை அறிந்து நிவர்த்தி செய்யும் நோக்கில் அனைத்து பாடசாலைகளுக்குமான களவிஜயம் நாடாளுமன்ற உறுப்பினர் அஷ்ரப் தாஹிரால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.



அந்த வகையில் செவ்வாய்க்கிழமை நிந்தவூர் பதுரியா வித்தியாலம்மற்றும்இமாம்கஸ்ஸாலிவித்தியாலயம்ஆகியவற்றிற்கு நேரடியாகச்சென்று அங்குள்ள குறைபாடுகளைக் கேட்டறிந்ததுடன் மாணவர்களின் தேவைகள், குறைபாடுகளை அறிந்து செயலாற்றும் நோக்கில் 'குறைகேள் பெட்டி' கையளிக்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

இதன் போது பதுரியா வித்தியாலயத்தின் அதிபர் மௌலவி ஜெசீர் அலி தலைமையில் பாடசாலைச் சமூகத்தினரால் நாடாளுமன்ற உறுப்பினர் மாலை அணிவிக்கப்பட்டு பூச்செறிந்து வரவேற்கபட்டதுடன் ஆசிரியர்கள் மாணவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டிருந்தது.

அதேபோல் இமாம் கஸ்ஸாலி வித்தியாலயத்தின் அதிபர் ஜாபிர் தலைமையில் பாடசாலை மாணவர்களால் பேண்ட் வாத்தியம் இசைக்கப்பட்டு, மாலை அணிவித்து பூச்செறிந்து வரவேற்பளிக்கப்பட்டிருந்ததுடன் உயர்தர பிரிவு மாணவர்களின் வகுப்பறை பௌதீக குறைபாடுகளை நேரடியாக அழைத்துச் சென்று குறிப்பிட்டமை சுட்டிக்காட்டத்தக்கது.






## குரங்குகளை....

### (இரண்டாம் பக்கத் தொடர்ச்சி)

அதேபோன்று மயில்களால் நெற் பயிர் செய்கைக்கு பாரிய பாதிப்பு ஏற்பட்டுள்ளது. விவசாயத்துக்கு வன விலங்குகளால் ஏற்படும் பாதிப்புக்களைக் குறைத்துக் கொண்டால் நாட்டில் அரிசி உள்ளிட்டவற்றுக்கு ஏற்படும் பாதிப்புக்களையும் குறைத்துக் கொள்ள முடியும் என்றார்.

## வானிலை....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதேநேரம், திருகோணமலையிலிருந்து காங்கேசன்துறை மற்றும் கொழும்பு ஊடாக காலி வரையான கடற்பரப்புகளில் மணித்தியாலத்துக்கு 30 முதல் 40 கிலோமீற்றர் வரையான வேகத்தில் காற்று வீசக்கூடும்.

அத்துடன், திருகோணமலையிலிருந்து காங்கேசன்துறை ஊடாக புத்தளம், கொழும்பு மற்றும் காலி வரையான கடற்பரப்புகளில் மணித்தியாலத்துக்கு 50 கிலோமீற்றர் வேகத்தில் காற்று வீசக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

இதேவேளை, வடக்கு, வடமத்திய, கிழக்கு மற்றும் வடமேல் மாகாணங்களில் இடைக்கிடையே மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

அதன்படி, வட மாகாணத்தின் சில பகுதிகளில் 100 மில்லிமீற்றருக்கும் அதிகளவான பலத்த மழை வீழ்ச்சி பதிவாகக்கூடும்.

நாட்டின் ஏனைய பகுதிகளில் மாலை அல்லது இரவில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

## கல்வி ....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொழிற்கல்வி வரையிலான கல்வி நிலைகளில் புதிய மாற்றத்தை ஏற்படுத்தத் தேவையான பல முக்கிய விடயங்கள் இங்கு கலந்துரையாடப்பட்டன.

நிகழ்வில் பேசிய பிரதமர் கலாநிதி ஹரினி மேலும் தெரிவித்ததாவது:

கல்வி என்பது மாற்றத்தை ஏற்படுத்தக்கூடியது என்பதை நாம் புரிந்துகொள்ளவேண்டும். அறிவைப் பெறுவதற்கு அப்பால், தனிப்பட்ட மற்றும் ஒரு கூட்டு மாற்றமாக ஒரு சமூக மாற்றம் நிகழ வேண்டும். அத்தகைய மாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய கல்விமுறையை நாம் கொண்டிருக்கவேண்டும். அதன் மூலம் உலகை வெற்றிகொள்வதற்கான வாய்ப்புகள் இருப்பதை பிள்ளைகள் பார்க்க முடியுமாக இருக்கவேண்டும். சமூகப் பொறுப்பை உணரவேண்டும். தனிப்பட்ட ரீதியில் மட்டுமன்றி, ஒரு சமூகமாகவும் எழுச்சிபெறவேண்டும். அதற்கான சமூகப் பொறுப்பு உள்ளது என்பதை உணரவேண்டும். அதன் மூலம் அறிவையும் திறமையையும் பெற வேண்டும்.

கல்வி ஒரு வர்த்தகப் பண்டம் அல்ல. நாம் கல்வியை ஒரு வர்த்தக பண்டமாக மாற்றியுள்ளோம். இந்த கலாசாரத்தை மாற்ற வேண்டும். நாம் ஓரிரு வாரங்களில் முடிவுகளை எதிர்பார்த்து கல்வியில் முதலீடுகளைச் செய்யவில்லை. இது ஒரு நீண்ட கால முதலீடாகும், அந்த முதலீட்டை ஆளும்தரப்புச் செய்யும். கல்வி அமைச்சும் அதன் கீழ் உள்ள நிறுவனங்களும் கல்வி தொடர்பான கொள்கை முடிவுகளை எடுக்கும் இடமாக மாறவேண்டும். அந்தக் கொள்கைகள் மற்றும் முடிவுகள் தரவுகளின் அடிப்படையில் இருக்கவேண்டும். ஊகங்கள் மற்றும் தனிப்பட்ட கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு முடிவுகளை எடுக்க முடியாது. தரவைச் சேகரிக்கவும் அதனை பேணவும் எங்களுக்கு ஒரு முறைமை தேவை.

அதிகாரிகளிடம் கருணை இருக்கவேண்டும். சேவையை எதிர்பார்த்து வருபவர்கள் அழுதுகொண்டு செல்வதைப் பார்க்கிறோம். அதிகாரிகள் அவர்களுக்கு செவி சாய்ப்பதில்லை, சரியாகப் பேசுவதில்லை, கேள்வி கேட்டால் பதில் சொல்வதில்லை. ஒரு விடயத்தை பல ஆண்டுகளாக இழுத்தடிப்புச் செய்கின்றனர் என்ற குற்றச்சாட்டுகள் உள்ளன. இந்த முறையை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் பிரதமர் மேலும் குறிப்பிட்டார்.

இந்நிகழ்வில் கல்வி பிரதியமைச்சர் வைத்தியர் மதுர செனவிரத்ன, கல்வி அமைச்சின் செயலாளர் நாலக களுவெல உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

## மகிந்தவின்....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் பாதுகாப்புக் குறைக்கப்படுவதாக அவரது பாதுகாப்புப் பிரிவுக்கு திங்கட்கிழமை மனிதவள முகாமைத்துவ பிரதிப் பொலிஸ்மா அதிபரினால் கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இதன்படி, முன்னாள் ஜனாதிபதியின் பாதுகாப்புப் பிரிவில் இருந்து 116 பாதுகாப்பு உத்தியோகத்தர்களை நீக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும், இந்தக் குழுவில் இருந்த உயர்தர பாதுகாப்பில் அனுபவம் வாய்ந்த அதிகாரிகள் அனைவரும் நீக்கப்பட்டுள்ளனர் எனவும் அவர் தெரிவித்தார்.

பிரபாகரன் சித்தாந்தம் கொண்டவர்கள் இதுவரை இல்லாதொழிக்கப்படாத நிலையில், அந்தப் பயங்கரவாதத்தை இல்லாதொழிக்க வழிவகுத்த முன்னாள் ஜனாதிபதியின் பாதுகாப்பை குறைக்க ஆளும்தரப்பு நடவடிக்கை எடுப்பது மிகவும் பாரதூரமான நிலை எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## பைசர்....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு அனுப்பி வைக்க வேண்டும் என தேசியப்பட்டியல் வெற்றிடத்துக்கான புரிந்துணர்வு உடன்படிக்கையில் பெரும்பான்மையான கட்சிகளின் தீர்மானமாக தனக்கு அறிவிக்கப்பட்டதாகவும் அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## தோட்டத் ....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செயலாளரான நாடாளுமன்ற உறுப்பினர் ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

கொட்டகலையில் அமைந்துள்ள சீ.எல்.எப். கேட்போர் கூடத்தில் நேற்று இ.தொ.காவின் தேசிய சபை கூடியது. அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனை தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த உள்ளூராட்சிசபைத் தேர்தலில் நுவரெலியா மாவட்டத்தில் இ.தொ.கா. ஐந்து சபைகளைக் கைப்பற்றியது. எனவே, இம்முறையும் உள்ளாட்சிசபைத் தேர்தலை வெற்றிகரமாக எதிர்கொள்வதற்கு வியூகம் வகுக்கப்படுகின்றது.

காங்கிரஸின் தனித்துவமான சேவல் சின்னத்தில் போட்டியிடுவது பற்றிப் பரிசீலிக்கப்படுகின்றது. கூட்டணி அமைப்பது தொடர்பில் இன்னும் பேச்சு நடத்தப்படவில்லை. அது பற்றியும் பரிசீலிக்கப்படுகின்றது.

இ.தொ.காவின் மறுசீரமைப்பு நடவடிக்கை விரைவில் இடம்பெறவேண்டும் என்ற தீர்மானம் தேசிய சபையில் எடுக்கப்பட்டது. இதற்காக குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது. இன்னும் 20 நாட்களில் அதற்குரிய நடவடிக்கை இடம்பெறும். நியமிக்கப்பட்ட குழு தனது பரிந்துரைகளை தேசிய சபைக்கு முன்வைக்கும். அதற்கமைய மறுசீரமைப்பு நடவடிக்கைகள் இடம்பெறும்.

காங்கிரஸால் முன்னெடுக்கப்பட்ட காணி உரிமை வழங்கும் வேலைத்திட்டத்தை தற்போதைய ஆளும்தரப்பும் முன்னெடுப்பது வரவேற்கதக்க விடயமாகும். ஆளும்தரப்பின் இப்படியான நல்ல திட்டங்களுக்கு இ.தொ.கா. ஒத்துழைப்பு வழங்கும். தோட்டத் தொழிலாளர்களுக்கு 10 பேர்ச்சஸ் காணியுடன் தனிவீடு அவசியம். தொடர் மாடி வீடு திட்டத்தை நாம் எதிர்க்கின்றோம் என்றார்.

## 2023இல் ....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நோயாளர்கள் கண்டறியப்பட்டுள்ளனர்.

10 தொடக்கம் 12 மாவட்டங்கள் அதி உயர் அபாயம் மிக்க பகுதிகளாக அடையாளப் படுத்தப்பட்டுள்ளன. இவ்வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் மாத்திரம் சுமார் 10 ஆயிரத்துக்கும் அண்ணளவான நோயாளர்கள் அடையாளங்காணப்பட்டுள்ளனர்.

நிலவிவரும் மழையுடன் கூடிய காலநிலை காரணமாக தொற்றாளர்களின் எண்ணிக்கையிலும் பெரும் அதிகரிப்பைக் காணக் கூடியதாக உள்ளது.

மழையுடன் கூடிய காலநிலை மற்றும் பெரும்போக நெற்செய்கை ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் அடையாளம் காணப்படும் எலிக்காய்ச்சல் நோயாளர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்க வாய்ப்புள்ளது. லெப்டோஸ்பைரா எனப்படும் ஒருவகை பற்றீரியா தொற்றால் இக்காய்ச்சல் ஏற்படுகிறது. பெருமளவில், நோய்த் தொற்றுக்கு ஆளான எலிகளின் சிறுநீர் மூலம் மனிதர்களுக்கு பரவுவதால் எலிக்காய்ச்சல் என அழைக்கப்படுகிறது.

நாய், மாடு, பன்றி, ஆடு போன்ற விலங்குகளின் மூலமும் இது பரவலாம். பற்றீரியா பரவியுள்ள நீர்நிலைகள், சதுப்பு நிலங்களில் நடமாடுதல், விளையாடுதல், பயிர்ச்செய்கை மற்றும் அகழ்வு பணிகளில் ஈடுபடுவதன் மூலம் தொற்று ஏற்பட அதிக வாய்ப்புள்ளது.

ஆகையால் பெரும்போக பயிர்ச்செய்கையில் ஈடுபடும் விவசாயிகள் அவதானத்துடன் செயற்படுவது நல்லது. மேலும் சுற்றுலாவுக்காக செல்வோர் நீர் தேங்கியுள்ள பகுதிகள் மற்றும் பழக்கமில்லாத நீர்நிலைகளில் நீராடுதல், விளையாட்டு சாகசங்களில் ஈடுபடுதல் என்பவற்றைத் தவிர்த்துக் கொள்ளலாம்.

நீர் அல்லது மண்ணில் கலந்துள்ள பற்றீரியா உடலில் உள்ள சிறு புண்கள், காயங்கள், கீறல்கள் மூலம் பரவக்கூடும். தொற்று ஏற்பட்ட நீரை அருந்துவதன் மூலமும் பரவக்கூடும்.

நோய் அறிகுறிகள் வெளிப்பட சுமார் 7 தொடக்கம் 14 நாட்களாகக் கூடும். ஆகையால் ஆபத்து மிக்க பகுதிகளில் வசிப்பவர்கள் மற்றும் விவசாயம், இரத்தினக்கல் அகழ்வு பணியை மேற்கொள்பவர்களுக்கு காய்ச்சல் ஏற்படின் உடனடியாக வைத்தியசாலையை நாடுவது நல்லது. நோய்த் தொற்றுக்கு ஆளானவரிடம் கடுமையான காய்ச்சல், தலைவலி, உடல் வலி, கண் சிவத்தல், வாந்தியும் குமட்டலும் போன்ற அறிகுறிகள் தென்படலாம்.

நோய் நிலைமையை ஆரம்பத்தில் இனங்கண்டு சிகிச்சை பெறுவது நல்லது. இல்லையேல் கடுமையான விளைவுகளும் உயிரிழப்பும் ஏற்படலாம். அத்துடன் நோய் தொற்று காரணமாக சிறுநீரகம், இதயம், மூளை, நுரையீரல், மண்ணீரல் உள்ளிட்ட உறுப்புகள் செயலிழப்பதற்கும் வாய்ப்புள்ளது.

விவசாயிகளின் நலன் கருதி சுகாதார மருத்துவ அதிகாரி அலுவலகங்கள் மூலம் நோய் எதிர்ப்பு மருந்து வழங்கப்படுகிறது. அவற்றை பொது சுகாதார அதிகாரிகளின் பரிந்துரைக்கமைய பெற்றுக் கொள்ளலாம்.

மேலும் யாழ்ப்பாணத்தில் மர்ம காய்ச்சலால் பலர் உயிரிழந்துள்ளனர். சுவாசக் குழாயில் ஏற்பட்ட தொற்றுக் காரணமாக அவர்கள் உயிரிழந்துள்ளனர் என்று தெரியவந்துள்ளது. அவர்களின் இறப்புக்களுக்கு எலிக்காய்ச்சல் காரணமாக இருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது.

இது தொடர்பில் தற்போது பரிசோதனைகள் இடம்பெற்று வருகின்றன. பரிசோதனை அறிக்கை கிடைக்க பெற்ற உடன் உறுதியான காரணம் வெளியிடப்படும் என்றார்.

## தேசியப் ....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி சட்டத்தரணி பைசர் முஸ்தபாவை நியமிக்க பரிந்துரைக்கப்பட்டுள்ளதாக செய்திகள் வெளியாகின. எனினும் இது குறித்து பங்காளிக் கட்சிகளுடன் எவ்வித கலந்துரையாடல்களும் முன்னெடுக்கப்படவில்லை என்று அவை தெரிவித்தன.

ஐக்கிய தேசிய கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்தனவால் வெளியிடப்பட்ட அறிக்கையில், புதிய ஜனநாயக முன்னணியின் தேசிய பட்டியல் உறுப்பினர்களை நியமிக்கும் அதிகாரம் அதன் செயலாளருக்கு கிடையாது என்றும், பைசர் முஸ்தபாவின் நியமனம் தொடர்பில் பங்காளிக் கட்சிகளுக்கும் அறிவிக்கப்படவில்லை என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது.

பொதுத் தேர்தலில் சமையல் எரிவாயு சிலிண்டர் சின்னத்தில் போட்டியிட்ட புதிய ஜனநாயக முன்னணியில் மூவர் வெற்றி பெற்றதோடு, இரண்டு தேசியப்பட்டியல் ஆசனங்களும் கிடைக்கப் பெற்றன. கடந்த நவம்பரில், முன்னாள் அமைச்சர் ரவி கருணாநாயக்கவின் பெயர் தேசியப் பட்டியல் உறுப்பினர்களில் ஒருவராக தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டது. அது சர்ச்சைக்குரியதாக மாறியது. பங்காளிகளுடன் கலந்துரையாடாமல் ஜனநாயக முன்னணியின் செயலாளர் தான்தோன்றித்தனமாக இந்தக் காரியத்தை முன்னெடுத்தார் என்று அப்போதும் தெரிவிக்கப்பட்டது.

தற்போது பைசர் முஸ்தபாவின் நியமனமும் சர்ச்சையை ஏற்படுத்தியிருக்கின்றது.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு

076 3983858

மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com



காலைக்கதிர்
Kalaikkathir

# இஸ்லாமாபாத் கழிவு நீர் பிரச்சினைக்கு தீர்வு காண தனியான நடவடிக்கைகள்

(அஸ்லம் எஸ்.மௌலானா)

கல்முனை, இஸ்லாமாபாத் சுனாமி வீட்டுத் தொகுதியில் நீண்ட காலமாக நிலவி வருகின்ற கழிவு நீர் பிரச்சினை குறித்து ஆராய்ந்து - நடவடிக்கை எடுப்பதற்காக தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஏ. ஆதம்பாவா மற்றும் கல்முனை மாநகர ஆணையாளர் என்.எம். நௌபீஸ் உள்ளிட்ட அதிகாரிகள் திங்கட்கிழமை மாலை அங்கு கள விஜயம் மேற்கொண்டனர்.

இஸ்லாமாபாத் வீட்டுத் திட்டத்தில் வசிக்கும் பொது மக்கள் சார்பில் விடுக்கப்பட்ட கோரிக்கையை ஏற்று இப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கான முன்னெடுப்புகளை மேற்கொள்ளும் பொருட்டு நாடாளுமன்ற உறுப்பினர் ஏ. ஆதம்பாவா, கல்முனை மாநகர சபைக்கு விஜயம் செய்து - மாநகர ஆணையாளருடன் இவ்விடயம் குறித்து கலந்துரையாடியதை அடுத்தே அதிகாரிகள் சகிதம் சென்று நிலைமைகளை ஆராய்ந்தார்.

கல்முனை மாநகர சபையின் பொறியியலாளர் ஏ.ஜே.ஏ.எச். ஜௌஸி, கணக்காளர் வை. ஹபீபுல்லாஹ் , உதவி ஆணையாளர் ஏ.எஸ்.எம். அஸீம், உள்ளூராட்சி உத்தியோகத்தர் எம். சர்ஜுன், வேலைகள் அத்தியட்சகர் பி.ரி.எம். நஹீம், தொழில்நுட்ப



உத்தியோகத்தர் எம். நுஸைர் உள்ளிட்டோரும் இதில் பங்கேற்றிருந்தனர்.

இதன்போது குறித்த பிரச்சினைக்கு விரைவாக நிரந்தரத் தீர்வு காண்பதற்கான மூலோபாய திட்டங்கள் தொடர்பிலான ஆலோசனைகள் பரிசீலிக்கப்பட்டதுடன் சாத்தியமான நடவடிக்கைகளை துரிதமாக முன்னெடுப்பது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

கடந்த 2004 ஆம் ஆண்டு சுனாமி அனர்த்தம் காரணமாக கல்முனையில் வீடு வாசல்களை இழந்த மக்களுக்காக இஸ்லாமாபாத் பகுதியில் அமைக்கப்பட்ட வீட்டுத் தொகுதியில் 194 குடும்பங்கள் வசித்து வருகின்றன.

இவ்வீடுகளுக்கான மலசல கூடக் கழிவுகளும் குளியலறை மற்றும் சமையலறை கழிவு நீர்களும் ஒட்டுமொத்தமாக ஒரே கழிவுக் குழியில் செலுத்தப் படுவதால் அக்குழியில் பாரிய அழுத்தங்களும் வெடிப்புகளும் ஏற்பட்டு கழிவு நீர் வெளியேறுவதால் அங்கு வசிக்கும் மக்கள் நீண்ட காலமாக சுகாதார சீர்கேடு மற்றும் துர்நாற்றத்திற்கு முகம் கொடுத்துக் கொண்டு பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருவதாக சுட்டிக்காட்டப்பட்டது.

இந்த வீட்டுத் தொகுதிகள் அமைக்கப்படும் போது மலசல கூட மற்றும் கழிவு நீர்கற்றலுக்கு முறையான திட்டமிடலுடன் கழிவுக் குழிகள் அமைக்கப்படாமையே இப்பிரச்சினைக்கு பிரதான காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த காலங்களில் இப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்காக முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகள் எவையும் வெற்றியளிக்கவில்லை எனவும் கூறப்படுகிறது.

# சபாநாயகருடனான தொடர்புகளை இராஜதந்திரிகள் புறக்கணிக்கட்டும்

## கோருகின்றார் கீதநாத்

சபாநாயகர் அசோக சபுமல் ரன்வலவின் 'கலாநிதி ' பட்டம் தொடர்பான குற்றச்சாட்டு தொடர்பில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென பொது மக்கள் வலியுறுத்தியுள்ளதாகவும் சபாநாயகருடனான தொடர்புகளைப் பேணுவதை இராஜதந்திர சமூகங்கள் புறக்கணிக்க வேண்டும் எனவும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் யாழ். மாவட்ட அமைப்பாளர் கீதநாத் காசிலிங்கம் தெரிவித்தார்.



இது தொடர்பில் கீதநாத் காசிலிங்கம் கூறுகையில்-

சபாநாயகர் அசோக சபுமல் ரன்வலவின் 'கலாநிதி ' பட்டம் தொடர்பான குற்றச்சாட்டு தொடர்பில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொது மக்கள் வலியுறுத்தியுள்ளனர். சபாநாயகர் அசோக சபுமல் ரன்வலவுடன் தொடர்புகளைப் பேணுவதை இராஜதந்திர சமூகங்கள் புறக்கணிக்க வேண்டும்.

சபாநாயகர் அசோக சபுமல் ரன்வல தனக்கு 'கலாநிதி' பட்டம் வழங்கியதாக குறிப்பிட்டிருந்தார். ஆனால், அவர் கலாநிதி பட்டம் பெறவில்லை. நாட்டின் சபாநாயகர் தனது தகுதிகளைத் தவறாகச் சித்தரித்திருப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது என பொது மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

இந்த குற்றச்சாட்டுக்கள் உரிய முறையில் தீர்க்கப்பட வேண்டும் எனவும் பொது மக்கள் வலியுறுத்தியுள்ளனர். ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க இந்த விடயம் தொடர்பில் ஆராய்ந்து உரிய நடவடிக்கை எடுப்பார் என்று தாம் நம்புவதாக பொது மக்கள் தெரிவித்துள்ளனர். - என்றார்.

# மனித உரிமைகள் லங்கா அமைப்பின் கொழும்பு இணைப்பாளராக ரோஸன்

(ஸாகிர்)

தெமட்டகொடையை வசிப்பிடமாகவும், அறக்கியாளை கிராமத்தை பிறப்பிடமாகவும் கொண்ட மொஹமட் நஸார் மொஹமட் ரோஸன் மனித உரிமைகள் லங்கா அமைப்பின் கொழும்பு மாவட்ட ஒருங்கிணைப்பாளராக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

இந்த நியமனம் நேற்று முன்தினம் (செவ்வாய்க்கிழமை) வழங்கி வைக்கப்பட்டது.

இவர், தற்போது முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தில் பணியாற்றும் ஓர் அதிகாரியாவார். அத்துடன் வக்பு நியாய சபையின் பதில் செயலாளராகவும் கடமையாற்றுகிறார்.

சமூகப்பணி இளமானிப்விஷேடபட்டத்தை தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் மூலம் பெற்ற ஒரு பட்டதாரியான இவர், தனது பாடசாலைக் கல்வியை கிரிஃஅறக்கியாளை முஸ்லிம் மகா வித்தியாலயத்திலும், கிரிஃ கெகுணகொல்லை தேசிய பாடசாலையிலும் பெற்றவர்.



அல்ஹாஜ் எஸ்.எல்.எம்.நஸார், எம்.எஸ்.டீ.ஹைரியா தம்பதிகளின் மகனான எம்.என்.எம். ரோஸன், சமூக சேவைகளில் சிறு வயது முதல் ஆர்வம் காட்டிவரும் இளம் சமூக ஆர்வலருமாவார்.

# சாவ. ஆதார வைத்தியசாலைக்கு சிறீபவானந்தராஜா எம்.பி வருகை

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு நாடாளுமன்ற உறுப்பினரான வைத்தியர் எஸ். சிறீபவானந்தராஜா செவ்வாய்க்கிழமை விஜயம் செய்தார்.

அதன்போது, வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் வைத்தியர் பு. ரஜீவ்வை சந்தித்து வைத்தியசாலை தொடர்பாக கலந்துரையாடியதுடன் சத்திர சிகிச்சை பிரிவு மற்றும் இரத்த வங்கி போன்றனவற்றின் தொழிற்பாடுகளை மேலும் விரிவுபடுத்துவது மற்றும் வினைத்திறனாக்குவது தொடர்பிலும் நடமாடும் சேவைகளை மக்களுக்கு வழங்குவது தொடர்பிலும் கலந்துரையாடினார்.



இந்தக் கலந்துரையாடலில் வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் மற்றும் வைத்தியர்கள், கிளிநொச்சி மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் த.வினோதன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

மேலும், கிளிநொச்சி மாவட்ட பிராந்திய சுகாதார சேவை பணிப்பாளர் வைத்தியர் த.விநோதன், சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் தேவைகளுக்கும் அத்தியாவசிய விடயங்களுக்கும் கிளிநொச்சி சுகாதார திணைக்களத்தின் பங்களிப்பு வழங்கப்படும் எனத் தெரிவித்தார். (05)

காலைக்கதிர்
Kalaikkathir

# இந்திய வீட்டுத்திட்டத்துக்காக நுவரெலியாவில் 519 பேருக்கான காணி உறுதிப் பத்திரங்கள்



4 ஆயிரம் இந்திய வீட்டுத்திட்டத்தில் நுவரெலியா மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகள் 519 பேருக்கான காணி உறுதிப் பத்திரங்கள் நேற்று (புதன்கிழமை) ஹற்றன் தொண்டமான் தொழிற்பயிற்சி நிலைய புதிய கலையரங்கில் வழங்கி வைக்கப்பட்டன.

பெருந்தோட்டம் மற்றும் சமூக உட்கட்டமைப்பு பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வை பெருந்தோட்ட பிராந்தியத்துக்கான புதிய அதிகார சபை ஏற்பாடுகளை முன்னெடுத்திருந்தது.

இந்த காணி உறுதி வழங்கும் நிகழ்வில் பெருந்தோட்டம் மற்றும் சமூக உட்கட்டமைப்பு பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப், தேசிய மக்கள் சக்தியின் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கலைச்செல்வி, கண்டிக்கான இந்திய துணைத்துதுவர் சரண்யா, பெருந்தோட்டம் மற்றும் சமூக உட்கட்டமைப்பு அமைச்சின் செயலாளர் பிரபாத் சந்திரகீர்த்தி, பெருந்தோட்ட பிராந்தியத்துக்கான புதிய அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் டீ.பங்கமுவ, அமைச்சின் அதிகாரிகள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.





# யாழில் ரூ. 20 லட்சத்துக்கு அதிகமான பண மோசடி

## ஒருவர் கைது

தளபாடங்களை தருவதாக கூறி யாழ்ப்பாணத்தில் பெருமளவான பண மோசடியில் ஈடுபட்ட சந்தேக நபர் ஒருவர் நேற்று (புதன்கிழமை) கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் விசேட குற்ற புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் கோண்டாவில் பகுதியில் வைத்து சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர், 20 லட்சத்து 32 ஆயிரம் ரூபா பெறுமதியான தளபாடங்களை தருவதாகக் கூறி, வவுனியாவில் உள்ள நபர் ஒருவரை ஏமாற்றி பணத்தைப் பெற்றுக்கொண்டு ஒரு மாதகாலமாக தலைமறைவாக இருந்துள்ளார்.

மேலதிக விசாரணைகளின் பின்னர், அவரை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# யாழில் இனங்காணப்படாத காய்ச்சல் பரவி வருகிறது

## தொற்றுநோயியல் திணைக்களம் தெரிவிப்பு




யாழ். மாவட்டத்தில் இனங்காணப்படாத காய்ச்சல் பரவி வருவதாக தொற்றுநோயியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

எவ்வாறாயினும், இந்த நிலை எலிக்காய்ச்சலா என்பதை உறுதிப்படுத்துவதற்கான விசாரணைகள் தற்போது இடம்பெற்று வருவதாக தொற்றுநோயியல் திணைக்களத்தின் வைத்தியர் குமுது வீரகோன் கூறுகிறார்.

எலிக்காய்ச்சல் மேலும் பரவும் அபாயம் தொடர்பில் சுகாதார மேம்பாட்டுப் பணியகத்தில் நேற்று (புதன்கிழமை) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

அப்பகுதிகளில் காய்ச்சல் மற்றும் சுவாசக் கோளாறு உள்ள நோயாளிகள் பதிவாகியுள்ளனர் எனவும், தற்போது சம்பந்தப்பட்ட காய்ச்சல் நோயாளிகளின் மாதிரிகளை எடுத்து பரிசோதனைகள் நடத்தப்பட்டு வருகின்றன எனவும் தெரிவித்தார்.

2023ஆம் ஆண்டில் நாடு முழுவதும் 9 ஆயிரத்துக்கும் மேற்பட்ட எலிக்காய்ச்சல் சம்பவங்கள் பதிவாகியுள்ளன. அவர்களில் கிட்டத்தட்ட 200 பேர் இறந்தனர்.

கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் இந்த வருட காலப்பகுதியில் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

நெல் விவசாயம் தொடர்பான சேறு மற்றும் நீர் தொடர்பான பயிர்ச்செய்கை நடவடிக்கைகளில் ஈடுபடும் விவசாயிகள், வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்கள், நெல் வயல் மற்றும் நீர் தொடர்பான பிற கடமைகளில் அடிக்கடி ஈடுபடுபவர்கள், சுரங்கங்கள் மற்றும் நீர் தொடர்பான பணிகளில் ஈடுபடுபவர்கள் எலிக்காய்ச்சலால் பாதிக்கப்படும் அபாயம் அதிகம்.

வாந்தி, தலைவலி, உடல் பலவீனம், சிறுநீரில் இரத்தம், சிறுநீர் கழித்தல் குறைதல் போன்றவற்றுடன் கடுமையான காய்ச்சல், கடுமையான தசைவலி மற்றும் கண் சிவத்தல் ஆகியவை எலிக் காய்ச்சலின் அறிகுறிகளாகும்.

இந்த அறிகுறிகள் தொடர்ந்தால், ஆரம்பகால சிகிச்சையானது நோயின் தீவிர நிலையை அடைவதைத் தடுக்கலாம். இல்லையெனில், சிறுநீரகம், கல்லீரல் மற்றும் மூளை உள்ளிட்ட உடல் உறுப்புகளுக்கு கடுமையான சேதத்தை ஏற்படுத்தலாம். மேலும் மரணம் கூட ஏற்படலாம்.

வயல் மற்றும் நீர் தொடர்பான வேலைகளுக்கு விண்ணப்பிக்கும் மக்களுக்கு சுகாதார அமைச்சால் நுண்ணுயிர் எதிர்ப்பி மருந்துகள் வழங்கப்படுவதாகவும், அதற்கமைய அவர்களின் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தின் பொதுச் சுகாதார பரிசோதகர் உரிய நுண்ணுயிர் எதிர்ப்பிகளை இலவசமாக பெற்றுக்கொள்ள முடியும். - என்றார்.

இதேவேளை, யாழ். போதனா வைத்தியசாலையில் கடந்த சில நாள்களில் மர்ம காய்ச்சலால் ஐவர் உயிரிழந்துள்ளனர். இவர்கள் திடீர் காய்ச்சல் காரணமாக போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளனர்.

அவர்களின் உடற்கூற்று மாதிரிகள் மேலதிக பரிசோதனைகளுக்காக கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. அதேவேளை பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் காய்ச்சலால் 30 பேர் சேர்க்கப்பட்டுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# சீன இராணுவ விஞ்ஞான அக்கடமி ஆய்வாளர்கள் பாத்பைண்டர் பவுன்டேஷன் பிரதிநிதிகள் சந்திப்பு



நாட்டுக்கு வருகை தந்திருக்கும் பெய்ஜிங்கின் இராணுவ விஞ்ஞான அகடமியின் ஆய்வாளர்களுக்கும் பாத்பைன்டர் பவுன்டேஷன் அமைப்பின் பிரதிநிதிகளுக்கும் இடையிலான சந்திப்பு அண்மையில் பேலியகொடவில் அமைந்திருக்கும் அவ்வமைப்பின் தலைமையகத்தில் நடைபெற்றது.

பாத்பைன்டர் பவுன்டேஷன் அமைப்புடனான தொடர்புகளை வலுப்படுத்துவதுடன், இருதரப்பினருக்கும் நன்மையளிக்கக்கூடிய விடயங்கள் குறித்துக் கலந்துரையாடும் நோக்கில் இலங்கைக்கு வருகைதந்திருக்கும் பெய்ஜிங் இராணுவ சட்டக்கட்டமைப்பு கற்கைகள் நிறுவனத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி இயங்கிவரும் இராணுவ விஞ்ஞான அகடமியின் பிரதிநிதிகள், இலங்கையும் சீனாவும் ஒன்றிணைந்து பணியாற்றுவதற்கு ஏதுவான புதிய வாய்ப்புக்கள் தொடர்பில் விரிவாக ஆராய்ந்தனர்.

அத்தோடு இவ்விருதரப்பு சந்திப்பின்போது ஒரு மண்டலம், ஒரு பாதை செயற்திட்டத்தின் பின்னணியில் சீன - இலங்கை உறவு, இருநாடுகளினதும் பாதுகாப்புத்துறை ஒழுங்குகள் மற்றும் இராணுவ சட்டக்கட்டமைப்பு தொடர்பான ஒப்பீடு, பாத்பைன்டர் பவுன்டேஷன் போன்ற வெற்றிகரமான இராஜதந்திர கொள்கைசார் அமைப்பை நிறுவுவதற்கான அணுகுமுறைகள் உள்ளிட்ட பல்வேறு முக்கிய விடயங்கள் குறித்து விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.



காலைக்கதிர் Kalaikkathir

# சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடகத்துறை மீதான மக்கள் நம்பிக்கையை கட்டியெழுப்புவது அவசியம்

## அனில் ஜாசிங்க திடசங்கற்பம்

சுகாதார மற்றும் வெகுசன ஊடகத் துறை மீது மக்கள் வைத்திருந்த நம்பிக்கை நலிவுற்றுள்ளது. ஆகையால் இவ்விருத்துறைகள் மீதான மக்கள் நம்பிக்கையை மீள கட்டியெழுப்புவது மிக அவசியம் என சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் செயலாளர் விசேட வைத்திய நிபுணர் அனில் ஜாசிங்க தெரிவித்தார்.

சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ள வைத்தியர் அனில் ஜாசிங்க புதன்கிழமை சுகாதார அமைச்சில் உத்தியோகப்பூர்வமாக தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

இதன்போது சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் வைத்தியர் நளிந்த ஜயதிஸ்ஸ உள்ளிட்ட அமைச்சின் அதிகாரிகள் பிரசன்னமாகியிருந்தனர்.

இந்நிகழ்வில் சுகாதார அமைச்சின் அதிகாரிகளிடம் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

ஐந்து வருடங்களுக்கு பிறகு மீள சுகாதார அமைச்சில் அங்கம் வகிக்க கிடைத்ததை எண்ணி மகிழ்ச்சியடைகிறேன். நம்பிக்கை என்பது பொதுவாக சிலரிடம் இருக்கும் சிலரிடம் இருக்காது.

நம்பிக்கை என்பது அரிய வகை இரத்தினம் போன்றது. அவ்வாறான நம்பிக்கையை வென்றெடுப்பதற்காக, நெருக்கடிக்கு முகங்கொடுத்துள்ள மக்களுக்கு நியாயமான மனிதாபிமானத்துடன் கூடிய சேவையை வழங்க சுகாதார அமைச்சரின் வழிகாட்டலுடன் நடவடிக்கைகளை முன்னெடுக்க எதிர்பார்த்துள்ளோம்.

சுகாதார அமைச்சின் சிரேஷ்ட மற்றும் நிபுணத்துவம் பெற்ற அதிகாரிகளுடன் இணைந்து மக்கள் எதிர்பார்த்த மாற்றத்தை ஏற்படுத்துவோம்.

அதிஷ்டவசமாக நாட்டை அபிவிருத்தி நோக்கி நகர்த்தும் வேலைத்திட்டத்தில் பங்களிக்கும் வாய்ப்புக்கிடைத்துள்ளது. சுகாதார மற்றும் வெகுசன ஊடகத் துறை மீது மக்கள் வைத்திருந்த நம்பிக்கை நலிவுற்றுள்ளது. ஆகையால் இவ்விருத்துறைகள் மீதான மக்கள் நம்பிக்கையை மீள கட்டியெழுப்புவது மிக அவசியம். - என்றார்.

இதன்போது சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் வைத்தியர் நளிந்த ஜயதிஸ்ஸ கருத்து தெரிவிக்கையில் -

சுகாதார மற்றும் வெகுசன ஊடகத்துறை ஆகிய இரு துறைகளும் பாரிய சவால்கள் உள்ளன. இவ்விருதுறை மீதான மக்கள் நம்பிக்கையை பெறுவது எமது கடமையாகும். தற்போது நடைமுறைப்படுத்தப் பட்டுள்ள திட்டங்களை தொடர்ந்து முன்னெடுப்பதுடன், புதிய வேலைத்திட்டங்களையும் சுகாதார அமைச்சின் செயலாளரின் அனுபவத்துடனும், ஒத்துழைப்புடனும் முன்னெடுக்க எதிர்பார்த்துள்ளோம். - என்றார்.



# அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழு தலைவராக ஏ. ஆதம்பாவா எம்.பி.

(ஸாகிர்)

கல்முனை, சாய்ந்தமருது, காரைதீவு, சம்மாந்துறை, அட்டாளைச்சேனை, நிந்தவூர், நாவிதன்வெளி, பொத்துவில், திருக்கோவில், ஆலையடிவேம்பு ஆகிய பிரதேச செயலகங்களுக்கான அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுத் தலைவராக திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அபூபக்கர் ஆதம்பாவா ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ளார்.








இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 12.12.2024இல் வெளியிடப்பெற்றது